# ஆண்டறிக்கை – 2012

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

(தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சு)

தொலைபேசி - 011 – 2424964, தொலைமடல் 0112437076 , மின்னஞ்சல் info@slic.gov.lk

# ஆண்டறிக்கை – 2012

**இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு**

தரைத்தளம், லான்லிப் கட்டிடம், 46/56, நவம் மாவத்தை, கொழும்பு - 02

**ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்**

திரு,தீபால் சூரிய ஆராய்ச்சி.
**ஆணையாளர்**

கலாநிதி காமிக பிரதாசிங்க
**உதவி ஆணையாளர்**

திரு, நலின்.டி.கருணாசிங்க
**உதவி ஆணையாளர்**திருமதி.பி.எம்.சுதர்சனி பீரிஸ்
**திறைசேரி பிரதிநிதி.**

திருமதி.டி.அநுராத எல். இளையப் பெருமா.
**பணிப்பாளர் (சி.நி.அ)(பதில்).**

**உள்ளடக்கம்**


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| **ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்** | | 3 |
| **ஆணையாளர் மீளாய்வு** | | 5-7 |
| **1.** | **அறிமுகவுரை** | 8 |
| **1.1** | இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை பற்றி | 8 |
| **1.2** | நோக்கு | 8 |
| **1.3** | பணி | 8 |
| **1.4** | பிரதான திறமுறைகள் | 8 |
| **1.5** | அமைப்பாண்மை கட்டமைப்பு/மனிதவளங்கள் | 9 |
| **2.** | **செயலாற்றுகை** | 10 |
| **2.1** | ஜனாதிபதி விருதுகள் | 11 |
| **2.2** | "சஹசக் நிமவும் "தேசியக் கண்காட்சி | 11-14 |
| **2.3** | பள்ளிக் கூட நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்கத்துடன் செயற்பட வைத்தல் | 14-15 |
| **2.4** | அறிவினை வழங்குதல் மற்றும் நிபுணர்களை அணுக வழிவகுத்தல் என்பனவற்றின் ஊடாக புத்தாக்குனர்களுக்கு அதிகாரம் அளித்தல் | 15-16 |
| **2.5** | பிரதான செயற்படுநராக வலைக்கடப்பீட திறமுறை | 16 |
| **2.6** | புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் | 17 |
| **2.7** | நிதியுதவிகளை வழங்குதல் | 17 |
| **2.8** | 2013 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் பொழிப்புரை | 18 |
| **2.9** | செயலாற்றுகை பற்றியதொரு கண்ணாட்டம் | 19-20 |
| **3.** | **வருடாந்த கணக்குகள்** | 21 |
| **3.1** | ஐந்தொகை | 22 |
| **3.2** | வருமான செலவின கணக்கு | 23-24 |
| **3.3** | குறிப்புகள் | 25-28 |
| **3.4** | நிதிக் கட்டமைப்பு | 29 |
| **3.5** | காசுப் பாய்ச்சல் கூற்று | 30 |
| **3.6** | கணக்கியல் கொள்கைகள் | 31 |
| **3.7** | நாட்குறிப்புகள்/நிலுவைச் செலவினங்கள் | 32 |
| **3.8** | பரீட்சை மீதி | 33-35 |
| **3.9** | பணிக் கொண்டஒதுக்கீடு | 36 |
| **4.** | **கணக்காய்வு அறிக்கை** | 37-45 |
| **5.** | **கணக்காய்வு அறிக்கைகான பதில்கள்** | 46-54 |

# ஆணையாளர் மீளாய்வு

கொண்டதினால் ஆணைக்குழுவானது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை சாதித்துள்ளது என்பதனை அடுத்து வரும் பக்கங்களிலிருந்து அறிந்துக் கொள்ள கூடியதாகவுள்ளது

தேசங்களின் நடப்பு பொருளாதார நிலையினை எடுத்து நோக்கின் எந்த தேசத்தினை பொறுத்த வரையிலும் அத்தேசத்தின் பொருளாதார சுபீட்சத்திற்கு புத்தாக்கமானது முக்கிய இடத்தை வகிக்கின்றது. தொரிவு செய்யப்பட்ட ஒரு சில புதிய கண்டுபிடிப்புகளுக்கு மட்டும் பக்கதுணையாக இருக்காது, பத்தாக்க துறையினையே வளம் பெறச் செய்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் துணையுடன் உகந்த தொரு சூழலியல் முறைமை ஆக்கப்படலிற்கு துணைமையாக இருத்தல் வேண்டும் என்பதனை ஆணைக்குழுவின் முதல் நிலை செயற்பாடாக நாம் சரியாக இனம் கண்டுள்ளோம்.

மீளாய்வுட்குட்பட்ட வருட காலத்தில் எமது ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட அநேகமான நடவடிக்கைகள் இந்தக் குறிக்கோளிற்குள் உள்ளடக்கப்பட வேண்டியவை ஆகும்.

இதனடிப்படையில் புத்தாக்கங்கள் புதிது புனைதல் என்பவை தொடர்பில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட முதன் முதலான தேசிய கண்காட்சியே 'சஹசக்நிமவும்' (ஆயிரம் புத்தாக்கங்கள்) கண்காட்சியாகும். நாட்டின் சகல ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியவகையில் 9000 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமையானது நாட்டின் மக்களிடையே புத்தாக்கம் பற்றியதான அபிலாஷைக்கு ஒரு சான்றாக அமைகிறது. புத்தாக்கத் துறையானது தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்க வேண்டும் என்ற தேவைப்பாட்டினாலும் இவ்விடயம் தொடர்பில் தனியார் துறையினரின் அதீத ஈடுபாட்டை பெற வேண்டும் என்பதனாலும் நாம் சக்தி மிகுந்த கூட்டுறவு அநுசரணைகளை தேடிப் பெற்றுக் கொள்கின்றோம். எமது இலட்சியமானது ஆசியவின் அறிவின் மையமாக இலங்கையை ஆக்குவதற்கு இந்த நிகழ்வினை வருடாந்த நிகழ்வாக்கி படிப்படியாக அதனை சர்வதேச கண்காட்சி எனும் தகுதிக்கு இட்டுச் செல்வதாகும்.

அநேகமான பள்ளிக்கூடங்களில் க.பொ.த. உயர்தர விஞ்ஞான பிரிவானது விஞ்ஞான ஆய்வுக் கூடத்தை கொண்டில்லாத போதிலும் இந்தக் கண்காட்சிக்கு மாணவர்களினால் வழங்கப்பட்ட பங்களிப்பினால் நாம் ஊக்குவிக்கப்பட்டோம். இவ்விடயம் தொடர்பில் மானவர் சமுதாயத்திற்கு மேலும் ஒரு ஊக்கத்தை வழங்கும் முகமாக தொலைக்காட்சியில் இளம் புத்தாக்குனர்களுக்காக இளம் புத்தாக்குனர் கழகம் எனும் தலைப்பில் ஒரு மெய் நிகழ்வினை நாம் முதன் முதலாக ஒழுங்கு செய்து ஆரம்பித்தோம். இது மாணவர்களுக்கு நினைவில் நிற்கக் கூடிய ஒரு நிகழ்ச்சியாகவும் ஊக்கத்தை அளிப்பதாகவும் அமைந்தது.

புத்தாக்குனர்களின் மதிப்பினை அதிகரித்தலும் அவர்களுக்கு அதிகாரத்தை அளித்தலும் எம்மால் முன்னுரிமை அளிக்கப்பட்ட இன்னுமொரு விடயமாகும். இவ்விடயம் தொடர்பில் நாம் பல முயற்சிகளை எடுத்தோம் அத்துடன் இவ்விடயம் தொடர்பில் புத்தாக்குனர்களுக்காக இலங்கை சந்தைப் படுத்தல் நிறுவகத்தினால் எது வித கட்டணமும் அறவிடப்படாது முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமானது இவ்விடயத்திற்கு சிறந்த பங்களிப்பாக அமைந்த அதே வேளையில், முகாமைத்துவ பட்டப்பின் நிறுவகமும் முகாமைத்துவ நிபுணர்களை அந்த நிபுணர்கள் தேவைப்படக்கூடிய புத்தாக்குனர்களுக்கு வழங்கியதன் மூலம் புத்தாக்குனர்களுக்கு தமது ஆதரவை நல்கியது.திறமுறைதிட்டத்திற்கு எதிரான எமது செயலாற்றுகையானது கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ள எமது விபரங்களிலிருந்து ஒரே கண்ணோட்டத்தின் மூலம் அறியலாம் என்பதுடன் திறமுறை திட்டம் தொடர்பிலான விரிவான கலத்துரையாடல்கள் தொடர்ந்து வரும் பக்கங்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

**2013** ஆம் ஆண்டிற்குரிய கூட்டுறவு திட்டத்தில் நாம் ஏற்கனவே தொடங்கப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கங்கள் தரப்பட்டுள்ளதுடன், இவை தொடர்பிலான திறமுறைகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய பரப்பெல்லைகளின் கீழ் அடக்கப்படுகின்றன:-

- புத்தாக்கங்களின் தரத்தை மேம்படுத்தல்
- வர்த்தகமயப்படுத்தல்
- புத்தாக்கங்களுக்கு உரிமையளித்தல்.
- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ந்தும் நீடித்து நிலைத்திருக்கச் செய்தல்.
- பதவியணியினரின் செயற்றிறன் விருத்தி.

***ஏற்றுக் கொள்ளல்கள்***

***சபை***

பதில் பணிப்பாளர் என்ற பதவியில் திருமதி. அனுராதா இளையப்பெருமா கடமையற்றிய போதிலும் தனக்குரித்தான கடமைகளை மிகசிறந்த முறையில் அவர் செய்கின்றார் ஆணைக்குழுவின் விவகாரங்களை மிக்சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கு எனது இணை உதவி ஆணையாளர்களான கலாநிதி. காமிக பிரதாபசிங்க மற்றும் திரு நவின் கருணாசிங்க ஆகியோர், மிகச் சிறந்த அளவில், வேறுபட்ட கோணங்களில் பக்கபலமாக நிற்கின்றனர். அத்துடன் சபைக்கூட்டங்களுக்கு சமூகமளித்த திறைசேரி பிரதிநிதி. திரு சுதர்சனி பீரிஸ் அவர்களையும் இந்த இடத்தில் நினைவு கூற விரும்புகிறேன்.

**அமைச்சிடமிருந்து உறுதுணை.**

அமைச்சின் கௌரவ அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி அவர்களினதும் மற்றும் அமைச்சின் செயலாளர் திருவதி தாரா விஜயதிலக அவர்களினதும் வழிநடத்தலின் கீழ் ஆணைக்குழுவானது அதனது ஒவ்வொரு சிக்கலான சந்தர்பங்களிலும் சிறந்த சக்தியினையும் சகாயத்தையும் பெற்றுக் கொண்டது.

**கூட்டுறவு நிறுவகங்களும் ஊடகமும்.**வருடகாலப் பகுதியில் புதினப்பத்திரிகையில் இலங்கை ரூபாயில் **3,800,000/=** அதிகமான பெறுமதியான தொகைக்கு விளம்பரங்களை நாம் இலவசமாக வழங்கினோம். பத்திரிகைகளும் மின்னணுவியல் ஊடகங்களும் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு துணைமையாக இருந்தன.

சஹசக் நிமவும் கண்காட்சிக்கு பிரதான திறமுறை பங்காளராக செயலாற்றிய பிரன்டிக்ஸ் மற்றும் டயலொக் நிறுவனத்தினருக்கு நான் விசேடமாக நன்றி செலுத்த விரும்புகிறேன். அடுத்து வரும் நிகழ்வில் எம்முடன் துணைமையாக செயலாற்றுதல் தொடர்பில் பிரண்டிக்ஸ் நிறுவனம் ஏற்கனவே எம்முடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. அது போன்று சஹசக்நிமவும் கண்காட்சியின் வெற்றிக்கு ஜெ.கெ.எச். வத்தளை டெலிவியூ மற்றும் மெலிபன் ஆகியோரும் உறுதுணையாக இருந்தனர்.

குழு

**2012** ஆம் ஆண்டு பூராவும் ஆணைக்குழுவானது மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் பணியாற்றியது. ஆணைக்குழுவின் பணி தொடர்பில் இந்த குழுவினைச் சார்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் ஊக்கத்துடனும் ஈடுபாட்டுடனும் பணியாற்றியமை என்னை மிகவும் வியக்க வைக்கதுடன் மகிழ்ச்சிக்குக் உள்ளாக்கியது. சிறிய

எண்ணிக்கையை கொண்ட குழுவினரால் சாதிக்கப்பட்ட பெரியசாதனையே அது. அத்துடன் அமைச்சின் நிதி மற்றும் நிர்வாக பிரிவினரால் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் வழங்கப்பட்ட உறுதுணைக்கு நான் நன்றி கூற விரும்புகிறேன்.

**தீபால் சூரிய ஆராய்ச்சி**
**ஆணையாளர்.**

## 1. அறிமுகவுரை

### 1.1 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினை பற்றி

1.2 1979 அம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவுற தாபிக்கப்பட்ட இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது ஒரு நியதிச் சட்ட சபையாகும். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் முதன்மை குறிக்கோளானது தேசத்தின் புத்தாக்கற்திறனை தொழில் நுட்பஇ நிதி மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் மூலம் மேம்படுத்தலாகும். ஆணைக்குழுவானது ஒரு ஆணையாளரையும் இரு உதவி ஆணையாளர்களையும் உறுப்பினர்களாக கொண்டுள்ளது. நேர் அமைச்சின் பரிந்துரைப்பின் கீழ்இ அமைச்சரவையின் அமைச்சர்களால் 03 வருட காலத்திற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்படுவர். இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 2010 ஆம் ஆண்டிலிருந்து தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படுகிறது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழுவினால் விருத்தி செய்யப்பட்ட கூட்டுறவு திட்டத்திற்கு அமைவுற இலங்கை புத்தாக்குனர் ஆணைக் குழுவின் குறிக்கோள்களை சாதிப்பதற்கு 2012 - 2014 ஆம் காலப்பகுதிக்குள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன..

### 1.3 நோக்கு

1.4 புதியகண்டு பிடிப்புகள் மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக சுபீட்சத்தை காணல்

### 1.5 பணி

- ❖ தேசத்திற்கு புத்தாக்க செயற்றிறனை கொண்டு வருவதில் தலை சிறந்த உந்து விசையாளராக இருத்தல்.
- ❖ கருத்துகளை செயல் முறைசார் பிரயோகங்களில் மாற்றீடு செய்வதற்கு துணைமை செய்யும் செயன் முறையின் முன்னோடியாக இருத்தல்.

ஆணைக்குழுவானது ஒரு தேசிய நிறுவனமாக இருப்பதினால் ஒரு உகந்த சூழ்நிலையினை உருவாக்குவதில் அதனால் ஆற்றப்பட வேண்டிய பங்களிப்பினை விளங்கிக் கொண்டதன் காரணமாகஇ மேற்கூறப்பட்ட பணியானது ஆணைக்குழு வினால் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மனிதவலு மற்றும் நிதி என்பன ஆணைக்குழுவிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருப்பதினால் ஆணைக்குழுவினால் ஆற்றப்பட வேண்டிய மேற் கூறப்பட்ட பங்களிப்பானது நடைமுறைப்படுத்தப்படுவதற்கு நீண்ட காலம் செல்லும். புத்தாக்கம் மற்றும் புதிது புனைதல் எனும் துறையில் புதிது புனைதல் செயன்முறைக்கு ஒரு சமூகத்திலிருந்து மூன்று காரணிகள் பங்களிப்பு செய்யப்படுகின்றன என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொரு வெளிப்படையான உண்மையே. அவையாவன பொருளியல் நிலைமைஇ புத்தாக்கத்தை பற்றி சமூகத்தின் நோக்கு மற்றும் மக்களின் கல்விமட்டம் அல்லது அவர்கள் சமூகத்திற்கு தம்மை வெளிப்படுத்தும் அளவு என்பனவாகும். ஆணைக்குழுவான பின்னிரண்டு காரணிகளிலும் தனது அதிக கவனத்தை செலுத்தியுள்ளது..

### 1.4 பிரதான திறமுறைகள்

- ❖ காப்புரிமை அளிக்கப்பட்ட புத்தாக்கங்களுக்கு ஜனாதிபதி விருது.
- ❖ புதிது புனைதல் மற்றும் புத்தாக்கங்களுக்கான “சஹசக் நிமவும்“ தேசிய கண்காட்சி
- ❖ பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊக்கமளித்தலும் மின்னணுவியல் ஊடகத்தின் வலுவினை மேம்படுத்தல்
- ❖ புத்தாக்குனர்களுக்கான நிதியத்தை வழங்குதல் தனியார் துறையினை அணுக வழிவகுத்தல்
- ❖ அறிவினை வழங்கவும் நிபுணர்களை அணுகவும் புத்தாக்குனர்களுக்கு அதிகாரமளித்தல்.
- ❖ புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம்
- ❖ நடப்பு நிலையின் பிரச்சனைகளை விளிக்கும் முகமாக சட்டத்தை இற்றைப்படுத்தல்
- ❖ பதவியணியினரின் செயற்றிறன் விருத்தி.
- ❖ வலுவுள்ள ஆளுகை சட்டகம்.

1.5 **அமைப்பாண்மை கட்டமைப்பு/மனிதவளங்கள்**




| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ள எண்ணிக்கை | தற்போது உள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பணிப்பாளர் (சி.நி.அ) | 01 | 01 (பதில்) | 01 |
| பிரதி உதவி பணிப்பாளர் | 01 | 01 | - |
| பிரதி உதவி பணிப்பாளர் (நிதி) | 01 | 01 (பதில்) | 01 |
| நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | 03 | 03 | - |
| நிர்வாக உதவியாளர் | 01 | 01 | - |
| கணக்கியல்/நிதி அலுவலர் | 01 | - | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 05 | - | 05 |
| முகாமைத்துவ உதவியாளர் | 06 | 03 | 03 |
| சாரதி | 03 | 02 | 01 |
| அலுவலக சிற்றூழியர் | 02 | 01 | 01 |
| மொத்தம் | 24 | 11 | 13 |

# செயலாற்றுகை – 2012

## 2.1 ஜனாதிபதி விருதுகள்

வருடகாலப்பகுதியில் காப்புரிமை பெறப்பட்ட புத்தாக்கங்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கப்பட்டு தகைமை வாய்ந்த நடுவர் குழாமினால் சிறந்த புத்தாக்கமானது தெரிவு செய்யப்பட்டது. தற்போதைய நிலைமையில் வருடந்தம் இலங்கையில் காப்பரிமை பெறும் புத்தாக்கங்கள் கணிசமானளவு குறைவாகும் 2012 ஆம் ஆண்டில் காப்புரிமை பெற்ற புத்தாக்கங்கள் 38. இதனால் இந்த நிகழ்வினை ஈராண்டுக் கொடு முறை நிகழ்த்துவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தீர்மானித்தது. இதற்கு காரணம் இவ்விடயம் தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்டளவு எண்ணிக்கையான விண்ணப்பங்களே கிடைக்கப் பெறுகின்றது என்பதாகும். 2012 ஆம் ஆண்டில் காப்புரிமையை பெற்றுக் கொண்ட புத்தாக்குனர் 2013 ஆம் ஆண்டில் போட்டியிட அப் போட்டிக்குரிய விருதுகள் அதற்கு அடுத்த வருடத்தில் வழங்கப்படும்.

## 2.2 "சஹசக் நிமவும்" தேசியக் கண்காட்சி

இலங்கை புத்தாக்குனர்களை முன்னிலைப்படுத்துவதற்கு ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட முதன் முதலான கண்காட்சி "சஹசக் நிமவும்" தேசியக் கண்காட்சியாகும். சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெறப்பட்ட 22 துறைகளின் கீழ் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. விண்ணப்பங்களாவன, பள்ளிக் கூட மாணவர்கள் பல்கலைக்கழகங்கள் மற்றும் திறந்த வகுதியின் கீழ் தனிப்பட்டோர், நிறுவனங்கள் மற்றும் வர்த்தகமயப்படுத்தப்பட்ட புத்தாக்கங்கள் ஆகியோரிடமிருந்தும் கோரப்பட்டன புத்தாக்குனரின் அவதானம் பெறப்படுவதற்காக தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஏழு துறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன;

- அங்கவீனர்களை சுயாதீனமாக இயங்கச் செய்வதற்கு தீர்வுகள்
- சூழலியல்
- சக்தி
- உணவு
- போதனா கருவிகள்
- இறக்குமதி பதிலீடுகள்.

வர்த்தக மயப்படுத்தல் வகுதி தவிர்ந்த ஏனைய வகுதிகளில் பங்குபெறும் சகலருள்ளும், வெற்றியாளர் யாவருக்கும் குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு பணப்பரிசுகள் வழங்கப்பட்டன. சகல வகுதிகளைச் சேர்ந்த பங்குபெறுநர்களுக்குள் சிறந்த புத்தாக்குனராக தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளருக்கு கௌரவம் மிகு "டேசிஸ்" விருதும் ரூபாய் 750,000,00 பணப் பரிசு வழங்கப்பட்டது.



பொருளியல் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் இராஜபக்ச கண்காட்சிக்கு விஜயம் செய்கின்றார்



பிரித்தானிய உயர் ஸ்தானிகர் கண்காட்சிக்கு விஜயம்

எமது வரலாற்றில் புகழ்பெற்ற புத்தாக்குனர்களில் ஒருவராகவும் பேரரசராகவும் திகழ்ந்த இராவணா எனும் அரசனுக்கு வழங்கப்பட்ட விருதே டேசிஸ் விருதாகும்.

தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வகுதிகளுக்குரிய விருதுகளான (பிரண்டிக்ஸ் நிறுவகத்தினால் அனுசரணை செய்யப்படுகிறது) அதாவது டேசிஸ் விருது (டயலொக் நிறுவனத்தினால் அநுசரணை செய்யப்படுகிறது) மற்றும் நுழைவு மட்ட துறைகளுக்கான இரு விருதுகள் (வட்டவா தோட்டத்துறையினரால் அநுசரணை செய்யப்படுகிறது) ஆகியவற்றை அனுசரணை செய்வதற்கு முன்னணி தனியார் துறையினரை கவரக் கூடிய திறன்.

நாட்டின் சகல பாகங்களையும் சேர்ந்த புத்ததக்குனர்கள் 921 புத்தாக்கங்களை சமர்ப்பித்தனர். நாட்டின் சகல ஒன்பது மாகாணங்களையும் சேர்ந்த பள்ளிகூட மாணவ புத்ததக்குனர்கள் 500 புத்தாக்கங்களுக்கு மேல் சமர்ப்பித்தனர். கிடைக்கப் பெற்ற 1500 விண்ணப்பங்களில் சிறப்புத்தகுதியையுடையோர் மாகாண மட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். நாடெங்கிலும் உள்ள விதாதா வள நிலையங்கள் உள்ளூர் புத்தாக்குனர்கள் ஊக்கத்துடன் பங்கு பெறுவதற்கு ஆதரவாக இருந்தமை ஆணைக்குழுவின் வரவேற்பை பெற்றது. தூர பிரதேங்களிலிருந்து வந்த கண்காட்சிப் பொருட்களினை போக்குவரத்து செய்தல் தொடர்பில் இந்த விதாதா நிலையத்தினருக்கு சில சந்தர்ப்பங்களில் வங்கியுடன் போக்குவரத்து செலவினத்தை அனுசரணை செய்தல் பற்றிய வேலை இருந்தது.



பண்டாரநாயக்கு ஞபகார்த்த சர்வசே நினைவு மண்டபத்தில் இடம் பெற்ற "சஹசக் நிமவும்" கண்காட்சிக்கு வந்த பார்வையாளர்கள்



மாணவர்கள் தமது புத்தாக்கத்தை அமைச்சருக்கு விளக்கப்படுத்துகின்றனர்.

**பங்குபெறும் குழுக்களின் அடிப்படையில் புத்தாக்கங்களின் என்னிக்கை**

| | திறந்த வகுதி | பல்கலைக்கழக வகுதி | பள்ளிக்கூட வகுதி | வர்த்தகமயப் படுத்தப்பட்ட வகுதி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| விண்ணபதாரிகளின் எண்ணிக்கை | 300 | 82 | 526 | 13 | 921 |
| நூற்றுவீதத்தில் | 32.6 | 8.9 | 57.1 | 1.4 | 100 |




**மாகாண அடிப்படையில் புத்தாக்க பகிர்வுகள்**

| மாகாணம் | புத்தாக்கங்களின் எண்ணிக்கை |
|---|---|
| மத்திய | 94 |
| கிழக்கு | 35 |
| வடக்கு | 73 |
| வட மேற்கு | 55 |
| வடமத்திய | 51 |
| சப்ரகமுவ | 124 |
| தென் | 125 |
| ஊவா | 40 |
| மேல் | 324 |



காப்புரிமை பெறப்பட்ட புத்தாக்கங்கள்

| வகுதி | காப்புரிமை | காப்புரிமை அளிக்கப்படாதவை |
|---|---|---|
| திறந்த | 68 | 232 |
| பல்கலைக்கழகம் | 4 | 78 |
| வர்த்தகமயப்படுத்தப்பட்டது | 12 | 1 |

*அநேகமாக சகல பள்ளிக்கூட புத்தாக்கங்கள் காப்புரிமை அற்றவை ஆகும்.

கண்காட்சி காலப்பகுதியில் கண்காட்சியில் பங்கு கொண்ட 300 இற்கும் அதிகமான பள்ளிக்கூட மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தங்குமிட வசதி வழங்கப்பட்டது.

கண்காட்சியானது பொருளியல் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் இராஜபக்ச அவர்களினாலும் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர் கௌரவ திருமதி. பவித்ரா வன்னியாராச்சி அவர்களினாலும் கல்வி அமைச்சர் கௌரவ பந்துல குணவர்தனவினாலும் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கண்காட்சியின் இரண்டாவது நாளில் சிறப்பு விருந்தினராக தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் பிரதியமைச்சர் கௌரவ - பய்சர்முஸ்தபாவும் மூன்றாவதுநாளில் பிரித்தானிய உயர் ஸ்தானிகர் திரு. கோன் ரன்கின் அவர்களும் கலந்து கொண்டனர்

மூன்று நாட்களுக்கும் அதிகமாக பண்டாரநாய ஞாபகார்த்த சர்வதேச நினைவு மண்டபத்தில் இடம் பெற்ற இந்தக் கண்காட்சியில் மூன்றாயிரம் பெயருக்கு அதிகமானோர் கலந்துக் கொண்டனர். புத்தாக்கங்களை பற்றி விரிவான விபரங்களை கொண்ட பிரசுரிப்பொன்று பிரசுரிக்கப்பட்டது. இது ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை மேம்படுத்த உதவுமொன்றாகும்.

### சஹசக் நிமவும் விருதுவைபவம்

சஹசக் நிமவும் வெற்றியாளர்களுக்குரிய விருது வைபவமானது 2012 டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச நினைவு மண்டபத்தின் பிரதான கூடத்தில் இடம் பெற்றதுடன் 235 வெற்றியாளர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. கிட்டத்தட்ட 1000 பேர் பங்கு பற்றிய இந்த

உற்சவத்தில் விசேட விருந்தினராக தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் கௌரவ அமைச்சர் பய்சர் முஸ்தபா கலந்துக் கொண்டார்.

திறந்த வகுதி, பல்கலைக்கழக மற்றும் தொழில் நுட்ப கல்லூர் வகுதி மற்றும் வர்த்தகமயப்படுத்தப்பட்ட வகுதி ஆகிய மூன்று வகுதிகளும் கருத்தில் கொள்ளப்பட்டு மூன்று டேசிஸ் விருது வழங்கப்பட்டது.

நடுவர் குழாமின் கருத்துப்படி பள்ளிக் கூட வகுதிக்குள் எதுவித புத்தாக்கங்களும் டேசிஸ் விருது பெறுவதற்கு தகுதியுடையதாக இருக்கவில்லை.




திறந்த வகுதிக்குள் டேசிஸ் விருதினை வெற்றிக் கொண்ட திரு.மஞ்சுகுணவர்தன விருதினை




வர்த்தக வகுதிக்குள் டேசிஸ் விருதினை வெற்றிக் கொண்ட திரு.அநுர சமரவிக்கிரம விருதினை பெறுகிறார்




பல்கலைக்கழக வகுதிக்குள் டேசிஸ் விருதினை வெற்றிக் கொண்ட திரு.கனின்டு நாணயக்கார விருதினை பெறுகிறார்

சஹசக் நிமவும் கண்காட்சிக்கும் விருது வைபவத்திற்கும் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் செலவிடப்பட்ட செலவினத் தொகை ரூபாய் 12.88 மில்லியன் ஆகும்.

**யாழ்ப்பாணத்தில் புத்தாக்க கண்காட்சி**

பள்ளிக்கூட புத்தாக்கங்களை யாழ்ப்பாணத்தில் காட்சிப்படுத்துவதற்கு ஒரு புத்தாக்குனர் கூடத்திற்கு ஆணைக்குழு ஒழுங்கு செய்தது. இந்த நிகழ்ச்சியானது, தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட "நல்லிணக்கத்தின் ஊடாக ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பம்" எனும் கண்காட்சியுடன் ஒருங்கிணைந்த வகையில் நடாத்தப்பட்டது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய நிலையத்தில் 2012,டிசம்பர் 10 மற்றும் 12 ஆம் திகதிகளில் கண்காட்சி இடம் பெற்றது. சஹசக் நிமவும் கண்காட்சியில் விருதுகளை வெற்றிக் கொண்ட தென்மாகாணத்தை சேர்ந்த 12 மாணவ புத்தாக்குனர்கள் அவர்களின் புத்தாக்கங்களை கண்காட்சி கூடத்தில் காட்சிப்படுத்தினர் நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்த செலவினம் 0.05 மில்லியன் ஆகும்.

### 2.3 பள்ளிக் கூட நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்கத்துடன் செயற்பட வைத்தல்

ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாவது பள்ளிக்கூட மாணவர்களிடையே புத்தாக்கத்திறனை மேம்படுத்தலாகும். அரச பாடசாலைகளில், 1AB,1C மற்றும் வகை 2 ஆகிய வகுப்புகளை சேர்ந்தோருக்கு பள்ளிக்கூட மட்டத்தில் புத்தாக்குனர் கழகங்களை தாபிக்கும் படி கல்வி அமைச்சினால் ஒரு சுற்றறிக்கை வழங்கப்பட்ட போதிலும் அரச அல்லாத பாடசாலைளில் அத்தகைய ஒரு நிலையினை தோற்றுவிப்பதற்கு எது வித நிகழ்ச்சித் திட்டங்களும் இல்லை. அரச அல்லாத பள்ளிக் கூடங்களின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை இலக்காக கொண்ட ஒரு விசேட கருத்தரங்கானது 2012.03.29 ஆம் திகதி இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் 65 ஆசிரியர்கள் பங்கு பற்றியதுடன் குறிப்பிட்டு கூறக்கூடிய விதத்தில் நடத்த இன்றுமொரு விடயம் மாணவ புத்தாக்குகளின் அறிமுகப்படுத்துகை ஆகும்.

இந்த நிகழ்ச்சியின் பெறுபேறாக கிட்டத்தட்ட 10 பள்ளி கூடங்கள் தமது பள்ளிக் கூடங்களில் புத்தாக்குனர் கழகங்களை தாபிப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கையை எடுத்துள்ளன.

இதை விட பள்ளிக்கூட நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிப்பதற்காக, மாணவர்களுக்கு கருத்தரங்குகளும் மாகாண மற்றும் வலய கல்வி பணிப்பாளர்களுக்காக இரு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன.

**சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பில் இளம் புத்தாக்குனர் கழகம்** உளதாயிருக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை கருத்தில் கொண்டு ஒரு மெய்யான வகையினைச் சேர்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்த ஆணைக்குழு திட்டமிட்டது இதன் ஒரு அங்கம் 30 நிமிடங்கள். என்ற அடிப்படையில் 30 அங்கங்களை கொண்டு சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டமாகும். இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் இணை அநுசரணையாளராக சம்பத் வங்கி இணைந்துள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கருப்பொருளானது தீடீர்க்குழப்பம் என்பது பற்றி ஆகும். இது தொடர்பிலான பருவக் கூட்டத் தொடர் உள்ளடங்கலாக இரு விசேட பயிற்சிப்பட்டறைகள் மாணவ புத்தாக்குனர்களால் பிறப்பிக்கப்பட்ட கருத்துகளை கொண்டு விருத்தி செய்யப்பட்டது.

சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பபடவுள்ள இந்த நிகழ்ச்சித்திட்டத்தின், முதலாவது பதிவின் போது முதலில் எட்டு பள்ளிக்கூடங்கள் பங்கு பற்றின இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பற்றியோருக்கு உணவு,பிரயாணம் மற்றும் விசேடபடிகள் என்பன வழங்கப்பட்டதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டமானது அடுத்த வருடத்திலிருந்து சுயாதீன தொலைக்காட்சி சேவையில் ஒளிபரப்பு செய்யப்படும்




இளம் புத்தாக்குனர் கழகத்தின் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்படல்




இளம் புத்தாக்குனர் கழகத்தின் அடையாள சின்னம்

பள்ளிக்கூட மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்த ஏற்பட்ட செலவினம் ரூபாய் 12 மில்லியன் ஆகும்

**2.4 அறிவினை வழங்குதல் மற்றும் நிபுணர்களை அணுக வழிவகுத்தல் என்பனவற்றின் ஊடாக புத்தாக்குனர்களுக்கு அதிகாரம் அளித்தல்**

- புத்தாக்குனர்களுக்காக வருடாந்தம் ஒரு சந்தைப்படுத்துகை கல்வியியல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு இலங்கை சந்தைப்படுத்துகை நிறுவகத்துடன் ஒரு புரிந்துணர்வு உடன் படிக்கையானது கைச்சாத்திடப்பட்டது. அத்தகைய முதலாவது நிகழவானது 2012/02/24 ஆம் திகதியன்று இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தில் 70 புத்தாக்குனர்களின் பங்குபெறலுடன் இடம் பெற்றது. இவ்விடயம் தொடர்பில் புத்தாக்குனர்களிடமிருந்து பெறப்பட்ட பின்னூட்டல் மிகவும் சாதகமாக அமைந்தது. இந்த நிகழ்வினை நடத்துதல் தொடர்பில் ஆணைக்குழுவிற்கு எதுவித செலவும் ஏற்படவில்லை.




இலங்கை சந்தைப்படுத்தள் நிறுவகம் இலங்கைபுத்தாக்குனர் ஆணைக்குழுவின் புத்தாக்குனர் முன்னரங்கு



புத்தாக்குனர்களுக்கான தேசிய கருத்தரங்கு

- கௌரவ அமைச்சரினால் ஒரு விசேட நிகழ்வில் கைச்சாத்திடப்பட்ட சான்றிதழை வழங்குவதன் மூலம் வர்த்தகரீதியாக வெற்றிக் கொண்ட புத்தாக்குனர்கள் அங்கீகரிக்கப்பட்டனர்.
- விருதுகளை வெற்றிக் கொண்ட புத்தாக்குனர்களுக்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட அடையாளச்சின்னங்கள் வழங்கப்பட்டன. இதனை புத்தாக்குனர்கள் அவர்களின் உற்பத்திகளிலும் மற்றும் வர்த்தக ரீதியிலான தொடர்பாடல் சாதனங்களிலும் பயன்படுத்தலாம் இதுவும் முதலாவது தடவையாக நிகழ்ந்த ஒரு நிகழ்வு ஆகும்.
- ரே விருது வழங்கல் திட்டத்தின் கீழ் பணத்தால் மானியம் வழங்கப்படுவதற்கு ஜனாதிபதி விருதினை வெற்றிக் கொண்ட வெற்றியாளர்களுள் ஒருவரை தெரிவு செய்வதற்கு ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையானது ரே விஜயவர்தன நன்கொடை நம்பிக்கை பொறுப்புடன் கைச்சகாத்திடப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஆறு வெற்றியாளர்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்ட போதிலும் சூழல் நட்புடன் கூடிய பயணிகள் கலத்தின் (Eco frienclly Passenger Craft) புத்தாக்குனரை தெரிவு செய்யப்பட்டதுடன்

- அவருக்கு கொமர்ஷல் வங்கியின் ஊடாக ஒரு மில்லியன் ரூபாய் மானியமும் மொறட்டுவ பல்கலைக்கலகத்தின் தொழில்நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

- வியாபார முகாமைத்துவத்தின் செயல்முறைசார் அறிவினை பெற்றுக் கொள்ள முற்படலே புத்தாக்குனர்களின் பிரதான தேவைப்பாடுகளில் ஒன்றாகும். இத்தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு, ஆணைக்குழுவானது ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்துடன் இணைந்து ஒரு நிகழ்ச்சித்திட்டத்தினை தொடங்கியது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது,தமது வியாபாரத்தை மேலும் விருத்தி செய்வதற்கு ஆர்வமுடைய புத்தாக்குனர்களும் முதுமானிக்கல்வியை கற்கும் மாணவர்களும் ஒருவருக்கொருவர் அறிமுகமாகக் கூடியதாய் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது மிகவும் சாதமான பெறுபேறுகளை தரக்கூடிய விதத்தில் தொடங்கியது. முகாமைத்துவ பட்டப்பின் நிறுவகத்தினால் பெயர் குறிப்பீடு செய்யப்பட்டவர்களுடன் இது வரையிலும் ஐந்து புத்தாக்குனர்கள் இணைந்து பணியாற்றியுள்ளனர். இதன் நிமித்தம் ஆணைக்குழுவிற்கு எது வித செலவினமும் ஏற்படவில்லை.

- ஜெனீவா சர்வதேச கண்காட்சியில் விருதினை வெற்றிக் கொண்ட புத்தாக்குனர்கள் BIA இன் அதிமுக்கிய பிரமுகர்கள் லோஞ்சில் அங்கீகரிக்கப்பட்டனர். இது வரலாற்றில் முதல் தடவையாக இடம் பெற்றதொரு நிகழ்வாகும்.

- தேசத்திற்கு மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிகழ்ச்சித்திட்டங்கள்.

  புத்தாக்கங்களை உருவாக்க ஆர்வமுடைய மாணவர்கள் மற்றும் மக்களுக்காக பொலநறுவை, அம்பாரை. மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் 04 விழிப்புணரச்சி கருத்தரங்குகளை நடாத்துவதற்கு இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு ஒழுங்கு செய்திருந்தது .04 விழிப்புணர்ச்சி கருத்தரங்குகளுக்கு பின்னர் தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சியில் காட்சிப்படுத்துவதற்கு ஒரு புத்தாக்கத்தை தெரிவு செய்யும் முகமாக ஒரு புத்தாக்க கண்காட்சியானது ஒழுங்கு செய்யப்படும். திட்டமிடப்பட்ட இந்த நிகழச்சித்திட்டத் தொகுதியின் முதலாவது கருத்தரங்கானது 260 மாணவர்களினதும் மற்றும் மட்டக்களப்பு மாநகரத்தை சேர்ந்த கல்வியியல் அதிகாரிகளின் பங்களிப்புடன் வெற்றிகரமாக இடம் பெற்றது. கருத்தரங்கானது 2012 நவம்பர் மாதம் 07 ஆம் திகதி செங்கலடி சென்ரல் கல்லூரியில் இடம் பெற்றது.

### 2.5 பிரதான செயற்படுநராக வலைக்கடப்பீட திறமுறை

ஆணைக்குழுவின் மொத்த திறமுறை திட்டத்தில் வலைக்கடப்பீட திறமுறையானது பிரதான ஆக்கக் கூறாக விளங்குகிறது. புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் கைதொழிற்துறையாளர்களுக்கு புத்தாக்குனர்களை அறிமுகமாக்கல், பள்ளிக் கூட மட்டத்திலான புத்தாக்கத்தை பதிவு செய்வதற்கான ஒரு தளத்தை வழங்குதல் மற்றும் அறிவின் வாயிலாக இருத்தல் என்பன இந்த வலைக்கடப்பீடத்தினால் ஆற்றப்படும் செயற்பாடுகளாகும்.




வலைக்கடப்பீடத்தின் அட்டைப் பக்கம்




வலைக்கடப்பீடத்தின் முன்பக்கம்

இந்த வலைக்கடப்பீடமானது ஆணைக்குழுவின் சகல நடவடிக்கைகளையும் உரிய நேரத்தில் பிரசுரிப்பதுடன் கூட்டுறவு திட்டத்திற்கு எதிரான ஆணைக்குழுவின் வளர்ச்சியினையும் காட்டுகிறது.மேலும் இந்த வலைக்கடப்பீடமானது காப்புரிமை போன்ற புத்தகங்கள் மற்றும் வெளிப்படுத்தல் செய்யப்படாத உடன்படிக்கையின் வரைவு போன்று புத்தாக்குனருக்கு பயனுள்ள பல ஆவணங்களை இறக்கம் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த வலைக்கடப்பீடத்தை விருத்தி செய்ய மொத்தமாக 0.322 மில்லியன் ரூபாய் செலவினம் ஏற்பட்டது.

**2.6 புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம்**

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, 2010 ஆம் ஆண்டில் ஜெனீவாவில் இடம் பெற்ற சர்வதேச புத்தாக்க கண்காட்சியில் வைத்தியர்.எஸ்.கெ.பி லெனாடாரா பங்கு பெறுவதற்கு அனுசரணை வழங்கியது. ஜனாதிபதி விருது வைபவத்தில் வெற்றியை ஈட்டிய வைத்தியர் லெனாடாரா என்பவரின் புத்தாக்கத்திற்கு ஜெனீவா சர்வதேச கண்காட்சியில் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. தங்கப் பதக்கம் பெற்றுக் கொள்ளப்பட்ட இவரது புத்தாக்கம் pneumatic self retaining surgical retractor system ஆகும்.



சர்வதேச ரீதியில் விருதினை பெற்ற பக்காக்குனர்களுக்கு வாவேர்பளிக்கல்




ஜெனிவாவில் இடம் பெற்ற சர்வதேச கண்காட்சியில் தங்கப்பதக்கத்தை வெற்றி கொண்ட வைத்தியர்.எஸ்.கெ.பி லெனடொர என்பவரும் வெள்ளிப் பதக்கத்தை வெற்றிக் கொண்ட

இலங்கை புத்தாக்குனர்களை 2012 ஆம் ஆண்டிற்கான சர்வதேச தொலைதொடர்பாடல் ஒன்றிய போட்டியில் பங்கு கொள்வதற்கு ஊக்குவித்தல்.

இச் செயற்றிட்டத்திற்கான மொத்த செலவினம் 0.8 மில்லியன் ரூபாய் ஆகும்.

**2.7 நிதியுதவிகளை வழங்குதல்**

ஆணைக்குழுவானது, வர்த்தகரீதியிலான செயலூட்டற்திறன், தேசிய முக்கியத்துவம் அல்லது இலகுவாக சந்தைப்படுத்தற்கூடிய தன்மை மற்றும் வினைமுயலுமை பண்புக் கூறுகள் ஆகிய இயல்புகளை கொண்ட பொருத்தமான புத்தாக்குனருக்கு நிதியுதவிகளை வழங்கும் பொருட்டு ஒரு விரிவான மற்றும் தெளிவான திறமுறையினை விருத்தி செய்துள்ளது. சஹசக் நிமவும் கண்காட்சி வெற்றியாளர்களிடையே இந்தப் புத்தாக்குனர் தெரிவு செய்யப்படுவர். இவ்விடயம் பொருட்டு தெரிவு செய்யப்படும் புத்தாக்குனர் அவருக்கு தேவைப்படும் வியாபார செய்கை முறை அறிவு மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான செய்கை முறை அறிவு என்பனவற்றை தொடர்படுத்தப்படும் பங்காளிடமிருந்து தெரிந்துக் கொள்வர் .

இவ்விடயம் தொடர்பில் ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சிடம் கோரப்பட்டுள்ள தொகை 4.5 மில்லியன் ஆகும்

**நடப்பு நிலையின் தேவைப்படுகளை பூரணப்படுத்தும் வகையில் சட்டத்தை இற்றைப்படுத்தல்**

நடப்பு நிலையின் தேவைப்படுகளை பூரணப்படுத்தும் வகையில் சட்டத்தை இற்றைப்படுத்தும் படி ஆணைக்குழு பிரேரணையை முன்வைத்துள்ளது.

**2.8 2013 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்ட பிரதான நடவடிக்கைகளின் பொழிப்புரை**

- புத்தாக்குனர்களின் அனுபவம், அறிவு மற்றும் கருத்து என்பனவற்றை பரிமாறிக் கொள்வதற்கு தேசிய கருத்தரங்கு.
- 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டிற்கு ஜனாதிபதி விருது வைபவத்தை நடாத்துதல்

- சஹசக் நிமவும் எனப்படும் தேசிய புத்தாக்க கண்காட்சியினை நடாத்துதல்
- பள்ளிக்கூடம், தொழில் நுட்ப கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் புத்தாக்குனர் வட்டங்களுக்கு ஊக்கமளித்தலும் சஹசக் நிமவும் தேசிய புத்தாக்க கண்காட்சியில் பங்கு கொள்ளச் செய்வதற்கு
- பள்ளிக்கூட மட்டத்தில் புத்தாக்கம் ஒன்றினை தெரிவு செய்யலும்
- சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்புடன் இணைந்து இளம் புத்தாக்குனர் கழகம், தொலை புத்தாக்குனர் கழகம் ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தல்
- புத்தாக்கத்தை முடிவுப் பொருள் மட்டத்திற்கு விருத்தி செய்தல்
- புத்தாக்குனர்களை சர்வதேச புத்தாக்க கண்காட்சியில் பங்குபெறச் செய்தல்
- புத்தாக்குனர்களுக்கு நிதியுதவியை வழங்குதல் பொருட்டு கூட்டு முயற்சி அடிப்படையில் மூலதன நிதியத்தினை வழங்கல்

## 2.9 செயலாற்றுகை பற்றியதொரு கண்ணாட்டம்

| திறமுறை | செயலாற்றுகை | நிதி முன்னேற்றம் |
|---|---|---|
| 1. ஜனாதிபதி விருதுகளை தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கு ஒருங்கிணைந்த வகையில் மீள் நிலை நிறுத்தம் செய்தல் | இந்த நிகழ்வு அலரி மாளிகையில் இடம் பெற்றுது.<br><br>2008,2009,2010 ஆம் ஆண்டின் வெற்றியாளர்களுக்கு பரிசளிக்கப்பட்டது.<br><br>விருது வைபவம் பற்றி விசேட தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் ஒளிபரப்பு செய்யப்படும். இந்நிகழ்வு தொடர்பில் பொதுமக்ககளின் கருத்தினை பெற்றுக் கொள்வதற்கு இந்நிகழ்ச்சியினை முதன்மை படுத்திய ஊடக விளம்பரங்கள் | ரூபாய் 8.6 மில்லியன் |
| 2. புத்தாக்க கலாச்சாரத்தை வியாபிக்க செய்வதற்காக "சஹசக் நிமவும்" தேசிய கண்காட்சி மற்றும் புத்தாக்குனர் மாதம். | புத்தாக்கம் மற்றும் புதிது புனைதல் பற்றிய முதன்முதலான தேசிய கண்காட்சியானது பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் செப்டெம்பர் 29 ஆம் திகதியிலிருந்து ஒக்டோபர், ஆம் திகதி வரை இடம் பெற்றது. 921 புத்தாக்குனர்களிடமிருந்து 1000 புத்தாக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டன, முழுநாட்டிலிருந்தும் 500 மாணவர்கள் தம்மை பதிவு செய்துக் கொண்டனர்<br><br>பங்கு பெறக்கூடிய வகுதிகள் 04, தொழில்நுட்ப துறைகள் 22 தேசிய ரீதியில் முக்கியத்துவம் பெற்ற துறைகளில் வெற்றி பெற்ற வெற்றியாளர்களுக்கு விசேட விருதுகள். ஒட்டு மொத்தமான அடிப்படையில்தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளருக்கு டேசிஸ் விருது<br><br>குறிப்பிடத்தக்களவில் தனியார் துறையினரின் பங்குடமை | இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்ட செலவினம் 12.88 மில்லியன்<br><br>அனுசரணை பெறுமானம் விருதுகள் 2.55 மில்லியன் ஊடகம் 4.6 மில்லியன்<br>தொலைக்காட்சி 0.3 மில்லியன்<br>விருந்தோம்பல் 0.1 மில்லியன்<br>மொத்த அனுசரனை 7.55 மில்லியன்<br><br>மொத்த கிரயம் 20.43 மில்லியன் |
| 3. பள்ளிக் கூட நிகழ்ச்சித் திட்டங்களினை ஊக்குவித்தல் மின்னணுவியல் ஊடகத்திறனை ஊக்குவித்தல் | ஆசிரியர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு போதிக்கும் முகமாக 22 பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள்<br><br>மாணவர்களுக்கான கருத்தரங்குகள் 08 சஹசக் நிமவும் தேசியக் கண்காட்சிக்கு விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் முகமாய், சகல ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கியதாய் 09 கூட்டத் தொடர்கள்.<br><br>புத்தாக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக முதன் முதலாக நேர் ஒளிபரப்பு காட்சி, தொடங்கப்படல்<br><br>இதன் முதல் தொகுப்பானது 30 கிழமைகளில் இடம் பெறும்.<br>இது தொடர்பிலான இணை அனுசரணை சம்பத் வங்கியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது | மொத்த செலவினம் 12 மில்லியன் ரூபாய்<br><br>அநுசரனை பெறுமதி 1.5 மில்லியன் |

| | | |
|---|---|---|
| 4. புத்தாக்குனர்கள் நிதியத்தைபெற்றுக் கொள்ளவும் தனியார் துறையினரை துறையினரை அணுகவும் துணை செய்தல் | சஹசக் நிமவும் தேசிய கண்காட்சியில் வெற்றிக் கொண்ட வெற்றியாளர்களிடையே மானியம் வழங்குவதற்கு ஏற்புடைய மிகச் சிறந்த புத்தாக்குனர்களை தெரிவு செய்தல் | |
| 5. அறிவினை வழங்குதல் மற்றும் நிபுணர்களை அணுகுவதற்கு பாதைவகுத்தலின் மூலம் புத்தாக்குனர்களுக்கு அதிகாரம் அளித்தல் | முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்திற்கு உதவிகளை பெறும் பொருட்டு அநேக புத்தாக்குனர்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை<br><br>வலைக்கடப்பீடத்தின் ஊடாக இறக்கம் செய்யக்கூடிய காப்புரிமை பற்றிய புத்தகமும் மற்றும் வெளிப்படுத்தல் செய்யப்படாத உடன்படிக்கையும் வழங்கப்படல் | இலவசமாக எதுவித கட்டணமுமின்றி |
| 6. பிரதான செயற்திறன் கொண்டவராக வலைக்கடப்பீட திறமுறை | வாங்குனர் விற்பனராக இயங்கக்கூடிய விரிவான வலைக்கடப்பீடத்தினை ஆரம்பித்தல்.<br><br>கூடிய புத்தாக்கங்களை காட்சிப் படுத்தக் கூடியதும் மற்றும் செயலூட்டற்றிறன் மிகுந்த முதலீட்டாளர்களை புத்தாக்குனர்கள் சந்திக்கக் கூடியதுமான ஒரு வலைக்கடப்பீடமானது அண்மித்த தகவல்களுடன் இற்றைப்படுத்தப்படுகின்றது<br><br>சராசரியாக 500 பேர் ஒரு மாதத்தில் வலைக்கடப் பீடத்துடன் தொடர்பு கொள்கின்றனர் | 0.322 மில்லியன் |
| 7. எமது புத்தாக்குனர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் | 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதி விருது பெற்ற வெற்றியாளருக்கு ஜெனிவா கண்காட்சிக்கு செல்வதற்கு முற்று முழுதாக அனுசரணை வழங்கல் இவ்விடயம் தொடர்பில் தங்கப் பதக்கம் பெற்ற வரும் வெள்ளி பதக்கம் பெற்றவரும் அநுசரணை செய்யப்பட்டனர். இவர்களுக்கு பிரமுகர்கள் லோஞ்சில் வரவேற்பு அளிக்கப்பட்டது.<br><br>உள்ளூர் புத்தாக்குனர்களை சர்வதேச கண்காட்சிகளுக்கும் போட்டிகளுக்கும் பங்கு கொள்ள ஊக்குவிப்பு வழங்கள் | 0.8 மில்லியன் |
| 8. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடப்பு பிரசசனைகளை விளக்கும் முகமாக சட்டத்தை இற்றைப்படுத்தல் | தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி அணுசக்தி அதிகாரசபை அமைச்சின் செயலாளரின் உதவியுடன் சட்டத்தில் இருக்கப்படவேண்டிய சீர்திருத்தங்கள் வரைவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது | 8. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நடப்பு பிரசசனைகளை விளக்கும் முகமாக சட்டத்தை இற்றைப்படுத்தல் |
| 9. பதவியணியினரின் செயற்றிறன் விருத்தி | முழு பதவியிணருக்கும் ஒரு விசேடபயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது<br><br>இதைவிட 10 பணிகளுடன் தொடர்புடைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அலுவலர்கள் பெயர் குறிப்பீடு செய்யப்பட்டது | 0.063 மில்லியன் |
| 10. வலுவான ஆளுமை சட்டகம் | மாதாந்தம் சபைக் கூட்டங்கள் இடம் பெறல்<br><br>நிலுவையாகவுள்ள சகல கணக்காய்வு விசாரணைகளும் பதிலளிக்கப்பட்டன | 0.063 மில்லியன் |

# வருடாந்த கணக்குகள் – 2012

**ஐந்தொகை**

**2012 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறானது**

| | குறிப்புகள் | 2012 | 2011 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | ரூபா. | ரூபா. |
| **நடைமுறைச் சொத்து அல்லாதவை** | | | |
| சொத்து, ஆதனம் உபகரணம் | 5 | 11,081,145.14 | 1,872,993.27 |
| **நடைமுறைச் சொத்து** | | | |
| ஏனைய ஒப்பந்த ரீதியிலான சேவைகளுக்கு முன் கொடுப்பனவு | | 341,088.44 | 341,088.44 |
| அனர்த்தக் கடன் | | 647,090.00 | 549,722.00 |
| கடன் - புத்தாக்குனர் நிதியம் | | 9,634,260.80 | 9,781,804.80 |
| பண்டிகை முற்பணம் | | 9,300.00 | 14,800.00 |
| (தேசிய பயிலுநர் கைத்தொழிற்துறை பயிற்சி அதிகார சபை திட்ட செயற்படுத்துகை, அமைச்சு) | | 7,560.00 | 7,560.00 |
| எரிபொருள் வைப்புகள் | | 100,000.00 | 100,000.00 |
| தேர்தல் ஆணையாளர் | | 13,524.50 | 13,524.50 |
| ஏனைய முற்பணங்கள் | | 136,632.80 | 136,632.80 |
| காசும், வங்கி மீதியும் | 8 | 4,363,456.35 | 3,409,438.49 |
| **மொத்த சொத்துக்கள்** | | 26,334,058.03 | 16,227,564.30 |
| **நிதியமும் பொறுப்புகளும்** | | | |
| திரட்டப்பட்ட நிதியம் | 9 | 18,569,410.73 | 10,087,396.53 |
| ஏனைய நிதியங்கள் | 10 | 2,543,450.34 | 2,543,450.34 |
| **நடைமுறைப் பொறுப்புகள் அல்லாதவை** | | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 11 | 1,302,914.25 | 1,467,441.38 |
| **நடப்பு பொறுப்புக்கள்** | | | |
| நிலுவை செலவினங்கள் | 12 | 3,918,282.71 | 2,129,276.05 |
| **மொத்த நிதியமும் பொறுப்புகளும்** | | 26,334,058.03 | 16,227,564.30 |

## வருமான செலவின கணக்கு

## 2012 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்கானது

| | குறிப்புகள் | 2012 | 2011 |
|---|---|---|---|
| **வருமானம்** | | ரூபாய். | ரூபாய். |
| **அரச பங்களிப்பு** | | | |
| அரச பங்களிப்பு - நடப்பு | | 17,992,000.00 | 11,963,400.00 |
| அரச பங்களிப்பு - புத்தரக்குனர் நிதியம் | | 0.00 | 0.00 |
| கூட்டுக | | | |
| ஏனைய வருமானம் | 4 | 4,285,869.19 | 158,675.18 |
| மொத்த வருமானம் | | 22,277,869.19 | 12,122,075.18 |
| **கழிக்க** | | | |
| **செலவினங்கள்** | | | |
| **(i) நிர்வாகம் மற்றும் தாபிப்பு** | | | |
| பதவியணியினருக்கு வேதனம் | 1 | 6,117,272.69 | 5,298,145.68 |
| நிர்வாகம் மற்றும் தாபிப்பு செலவினங்கள் | 2 | 12,480,511.42 | 8,137,683.86 |
| பெறுமானத்தேய்வு – நலையானசொத்துகள் | 5 | 2,941,890.14 | 3,023,690.15 |
| பணிக்கொடை | 11 | 363,189.37 | 169,261.38 |
| **(ii) செயற்திட்ட செலவினங்கள்** | | | |
| புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள் | 3 | 22,304,991.37 | 3,169,056.49 |
| மொத்த செலவினம் | | 44,207,854.99 | 19,797,837.56 |
| செலவினத்திற்கு மிகையான வருமானம் | | (21,929,985.80) | (7,675,762.38) |
| மேலதிக வருமானம் திரட்டப்பட்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டது | | 22,277,869.19 | 12,122,075.18 |

தயாரிப்பு : ....................................

பரிசீலனை : ....................................

**ஒப்பம் இடப்பட்டது :**

**……….....................................**

**…………………………………..**

**எ.பி.என்.எம்.பாடாபெண்டிகே** **டி.அனுராதா**

**இனையப் பெருமா**

உதவிப்பணிப்பாளர் (நிதி) பணிப்பாளர்

**...../03/2013** **...../03/2013**

# இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

## லான்லிப் கட்டிடம்

## இல.46/50 நவம் மாவத்தை

## கொழும்பு - 02

## கணக்குகளுக்கான குறிப்புகள்

### குறிப்பு 01 - பதவியணியினருக்கான வேதனம்

| | 2012 (Rs.) | 2011 (Rs.) |
|---|---|---|
| சம்பளங்கள் | 2,911,334.22 | 2,949,512.57 |
| வாழ்க்கைப்படிச் செலவினம் | 816,367.50 | 935,805.00 |
| விசேடபடிகள் | 355,045.60 | 135,903.95 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 585,474.15 | 518,083.14 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 113,325.10 | 103,616.62 |
| பதில் கடமையாற்றலிற்கு படிகள் | 114,966.00 | 0.00 |
| ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்குச் சம்பளம் | 830,410.00 | 440,910.00 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 390,350.12 | 214,314.40 |
| | 6,117,272.69 | 5,298,145.68 |

### குறிப்பு 02நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்

| | 2012 (Rs.) | 2011 (Rs.) |
|---|---|---|
| பிரயாணம் – உள்ளூர் | 56,318.00 | 48,917.00 |
| காகிதாயிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 184,180.18 | 144,884.10 |
| எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 535,986.00 | 261,381.00 |
| வாகன திருத்துகை மற்றும் பேணல் | 1,532,760.74 | 510,432.19 |
| கருவிகளைத் திருத்தலும் பேணலும் | 72,464.16 | 152,867.29 |
| சொத்துகளின் கொள்வனவு | 0.00 | 0.00 |
| தபாற் செலவினம் | 10,385.00 | 8,520.00 |
| தொலைபேசிக் கட்டணம் | 237,458.88 | 210,905.87 |
| பயன்பாடுகள் | 95,634.00 | 152,768.00 |
| ஓப்பந்த சேவைகள், | 562,506.32 | 367,223.13 |
| மின்சாரக் கட்டணம் | 502,704.20 | 474,849.83 |
| துப்பரவாக்கற் சேவைகள் | 162,000.00 | 162,000.00 |
| நீர்க் கட்டணம் | 49,254.54 | 75,875.01 |
| வாடகை | 5,303,900.40 | 5,188,295.44 |
| கேளிக்கைச் செலவினம் | 84,597.00 | 68,849.10 |
| ஏனைய நிர்வாகச் செலவினம் | 91,512.00 | 35,885.90 |
| புதினப் பத்திரிகைகள், பருவச் சஞ்சிகைகள் | 29,090.00 | 24,030.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 0.00 | 250,000.00 |
| விற்பனை வருமானம் | 2,969,760.00 | 0.00 |
| | 12,480,511.42 | 8,137,683.86 |

| கணக்குகளுக்கான குறிப்புகள் | 2012 | 2011 |
|---|---|---|
| | (Rs.) | (Rs.) |
| **குறிப்பு 03 - புத்தாக்குனர் ஊக்குவிப்பு செலவினங்கள்** | | |
| ஜனாதிபதி வெகுமதி வைபவம் | 7,097,442.75 | 1,518,124.43 |
| பிரசுரிப்பம் பரப்புதலும் | 0.00 | 68,196.80 |
| மேலதிக அபிவிருத்திக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி | 20,695.00 | 353,845.31 |
| தேசிய புத்தாக்குனர் மாதத்தினை கொண்டாடல் | 12,880,045.18 | 0.00 |
| சர்வதேச புத்தாக்குனர் கண்காட்சிகளில் புத்தாக்குனர் பங்கு பெறல் | 824,008.51 | 0.00 |
| வலைக் கடப்பீடமுகாமைத்துவம் | 381,151.16 | 80,500.00 |
| பள்ளிக் கூட மட்டத்தில் புத்தாக்க செயன்முறையினை புதுப்பித்தல் | 106,056.80 | 504,933.70 |
| சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 129,353.50 | 0.00 |
| சஹசக் நிமவும்க்கு பள்ளிக் கூட புத்தாக்கங்கள் | 466,107.73 | 0.00 |
| தேசத்திற்கு மகுடத்தில் பங்குபெறல் | 48,910.00 | 0.00 |
| Learn தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பல் | 15,000.00 | 0.00 |
| புத்தாக்குனர்களுக்கான தேசிய கருத்தரங்கு | 1,380.00 | 0.00 |
| பதவியணி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 62,665.00 | 0.00 |
| தேசிய மட்டகண்காட்சி/ புத்தாக்கங்களின் சந்தை | 0.00 | 503,923.00 |
| இ.ச.நிறுவகம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 8,710.00 | 0.00 |
| உள்நாட்டு இணைவரி | 0.00 | 116,069.25 |
| | 22,304,991.37 | 3,145,592.49 |
| **குறிப்பு 04 - ஏனைய வருமானம்** | | |
| அனர்த்தக் கடன் வட்டி | 38,331.44 | 28,844.38 |
| கடன் வட்டி - புத்தாக்குனர் நிதியம் | 0.00 | 35,887.80 |
| ஏனைய வருமானம் | 4,247,537.75 | 93,943.00 |
| | 4,285,869.19 | 158,675.18 |
| **குறிப்பு 07 - முற்பணங்கள்** | | |
| முற்பணம் | 0.00 | 136,632.80 |
| | 0.00 | 136,632.80 |
| **குறிப்பு 08காசு மற்றும் வங்கி மீதிகள்** | | |
| கணக்கு இலக்கம்: 033-1-001-0-1791066(T/F) | 772,501.28 | 17,523.42 |
| கணக்கு இலக்கம்: 033-1-001-2-1791065(P/F) | 3,590,955.07 | 3,391,915.07 |
| | 4,363,456.35 | 3,409,438.49 |
| **குறிப்பு 09 - திரட்டப்பட்ட நிதியம்** | | |
| மிகுதி முற்கொண்டு வந்தது அரச பங்களிப்பு - மூலதனம் | 10,087,396.53 | 11,612,148.91 |
| திரட்டப்பட்டதில் மிகுதி முற்கொண்டு வந்தது (நட்ட/மிகை) | (21,929,985.80) | 7,675,762.38 |
| அரச பங்களிப்பு - மூலதனம் | 21,562,000.00 | 6,151,010.00 |
| அரச பங்களிப்பு (வாகனம்) | 8,850,000.00 | 0.00 |
| | 18,569,410.73 | 10,087,396.53 |
| **குறிப்பு 10 - ஏனைய நிதியம்** | | |
| புத்தாக்குனர் நிதியம் | 2,543,450.34 | 2,522,375.59 |
| | 0.00 | 21,074.75 |
| | 2,543,450.34 | 2,543,450.34 |

**கணக்குகளுக்கான குறிப்புகள்**

| | 2012 (Rs.) | 2011 (Rs.) |
|---|---|---|
| **குறிப்பு 11 - பணிக்கொடை ஏற்பாடு** | | |
| 2012.01.01 இல் மிகுதி | 1,467,441.38 | 1,455,287.50 |
| வருடத்திற்கான ஒதுக்கீடு | 363,189.37 | 169,261.38 |
| பணிக்கொடைக் கொடுப்பனவு | (527,716.50) | (157,107.50) |
| 2012.12.31 இல் மிகுதி | 1,302,914.25 | 1,467,441.38 |
| **குறிப்பு 12 - நிலுவைச் செலவினங்கள்** | | |
| சம்பளங்கள் | 0.00 | 17,376.00 |
| வாழ்க்கைச் செலவினம் | 0.00 | 7,995.00 |
| விசேட படிகள் | 0.00 | 2,606.40 |
| ஏரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 14,375.00 | 15,960.00 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 0.00 | 14,233.80 |
| புதினப் பத்திரிகை மற்றும் பருவச் சஞ்சிகைகள் | 0.00 | 1,780.00 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 18,946.11 | 36,782.28 |
| மின்சாரக் கட்டணங்கள் | 51,421.60 | 34,894.65 |
| நீர்க் கட்டணங்கள் | 0.00 | 8,492.28 |
| விலைமனுக்கோரல் வைப்பு மீளளிப்பு | 0.00 | 36,087.20 |
| கடன் கொடுத்தோர் | 0.00 | 82,860.65 |
| கணக்காய்வுக் கட்டணம் | 0.00 | 920,000.00 |
| மானனெல் காந்தி | 0.00 | 503.27 |
| கல்வி அமைச்சு | 0.00 | 46,305.00 |
| | 84,742.71 | 1,225,876.53 |
| **புத்தாக்குனர் ஊக்குவிப்புச் செலவினங்கள் நிலுவைச் செலவினங்கள்** | | |
| பிரதீபா - தொலைகாட்சிநிகழ்ச்சி | 6,500.00 | 0.00 |
| சுயாதீன தொலைக்காட்சி சேவை | 3,827,040.00 | 0.00 |
| ஆக்கத்திறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல் | 0.00 | 0.00 |
| சர்வதேசக் கண்காட்சி | 0.00 | 903,399.52 |
| பிரசுரிப்பும் பரப்புதலும் | 0.00 | 0.00 |
| காட்சியக மற்றும் விற்பனை நிலையமொன்றை அமைத்தல் | 0.00 | 0.00 |
| | 3,833,540.00 | 903,399.52 |
| மொத்த நிலுவைச் செலவினம் | 3,918,282.71 | 2,129,276.05 |

**குறிப்பு 13**

**பின் ஐந்தொகை நிகழ்வுகள்**

பின் ஐந்தொகை நிகழ்வுகள் எதுவுமில்லை

**அரச மானியம்**

2012 ஆம் ஆண்டில் கிடைக்கபெற்ற அரச மானியம் பற்றி பொழிப்புரை வருமாறு.

**இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டம் 24 இற்கு அமைவுற**

| | 2012 | 2011 |
|---|---|---|
| நடப்பு மானியம் | 17,992,000.00 | 12,651,000.00 |
| மூலதன மானியம் | 21,562,000.00 | 4,500,000.00 |

**தொடர்புள்ள ஆட்கள் பற்றிய வெளிப்படுத்தல்கள்**

2012 ஆம் ஆண்டில் தொடர்புள்ள ஆட்கள் பற்றி எதுவித கொடுக்கல் வாங்கல்களும் இல்லை.

குறிப்பு 05

<u>நிலையான சொத்துக்கள் மற்றும் பெறுமானத் தேய்வுக் கட்டணங்கள்</u>

| வகுதிகள் | பெறுமானத் தேய்வு வீதம் | 2012.01.01 இல் மிகுதி ரூபா. | 2012 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டவைகள் (கொள்விலையில்) ரூபா. | 2012.12. 31 இல் மொத்த கொள் விலை | 2012 01.01. வரை திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வுக் கட்டணம் ரூபா | 2012 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வுக் கட்டணம் ரூபா | 2012.12. 31 ஆம் திகதிக்கு திரட்டப்பட்ட கட்டணம் ரூபா | 2012.12. 31 இல் குறைத்து எழுதப்பட்ட பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| **1. தளபாடங்களும் கருவிகளும்** | 15% | | | | | | | |
| அ) தளபாடமும், கருவிகளும் | | 537,751.00 | 0.00 | 537,751.00 | 299,790.75 | 80,662.65 | 380,453.40 | 157,297.60 |
| ஆ) நிறைவேற்றுனர் கதிரைகள் | | 157,222.50 | 0.00 | 157,222.50 | 117,916.90 | 23,583.38 | 141,500.28 | 15,722.23 |
| இ) தட்டெழுத்துப்பொறி மேசைகள் | | 4,700.00 | 0.00 | 4,700.00 | 4,700.00 | 0.00 | 4,700.00 | 0.00 |
| ஈ) ராக்கைகளும், பெட்டிகளும் | | 90,236.00 | 0.00 | 90,236.00 | 81,398.50 | 8,837.50 | 90,236.00 | 0.00 |
| உ) நகர்த்தக்கூடிய சிறு அலுமாரிகள் | | 14,787.00 | 0.00 | 14,787.00 | 11,090.25 | 2,218.05 | 13,308.30 | 1,478.70 |
| | | **804,696.50** | **0.00** | **804,696.50** | **514,896.40** | **115,301.58** | 630,197.98 | **174,498.53** |
| **2. அலுவலக கருவிகள்** | 20% | | | | | | | |
| அ) அலுவலக கருவிகள் | | 771,756.70 | 290,800.44 | 1,062,557.14 | 700,415.90 | 154,351.34 | 854,767.24 | 207,789.90 |
| ஆ) இலத்திரனியல் தட்டெழுத்துப் பொறி | | 117,887.50 | 0.00 | 117,887.50 | 117,887.50 | 0.00 | 117,887.50 | 0.00 |
| இ) கணனி மற்றும் துணையுறுப்புகள் | | 6,043,340.18 | 1,252,840.00 | 7,296,180.18 | 5,379,345.18 | 1,208,668.04 | 6,588,013.22 | 708,166.96 |
| ஈ) நிழ்ற்பிரதி இயந்திரம் | | 385,400.00 | 0.00 | 385,400.00 | 192,320.00 | 77,080.00 | 269,400.00 | 116,000.00 |
| உ) தொலைபேசி | | 342,049.95 | 0.00 | 342,049.95 | 310,344.75 | 31,705.20 | 342,049.95 | 0.00 |
| ஊ) பிரதி இயந்திரம் | | 717,875.00 | 0.00 | 717,875.00 | 717,875.00 | 0.00 | 717,875.00 | 0.00 |
| | | **8,378,309.33** | **1,543,640.44** | **9,921,949.77** | **7,418,188.33** | **1,471,804.58** | **8,889,992.91** | **1,031,956.86** |
| **3. மூலவகை மாதிரிகள்** | 10% | | | | | | | |
| அ) மூலவகை மாதிரிகளும் பெயர்ப் பலகைகளும் | | 105,495.00 | 0.00 | 105,495.00 | 105,495.00 | 0.00 | 105,495.00 | 0.00 |
| ஆ) காட்சியக நிலையம் | | 110,805.00 | 0.00 | 110,805.00 | 67,405.10 | 11,080.50 | 78,485.60 | 32,319.40 |
| | | **216,300.00** | **0.00** | **216,300.00** | **172,900.10** | **11,080.50** | **183,980.60** | **32,319.40** |
| 4. நூலக புத்தகங்கள் | 10% | **193,357.48** | **0.00** | **193,357.48** | **184,998.58** | **8,358.90** | **193,357.48** | **0.00** |
| 5. வாகனங்கள் | 20% | **9,557,842.83** | **8,850,000.00** | **18,407,842.83** | **8,023,490.60** | 0.00 | 0.00 | 0.00 |
| | | | | **(2,018,682.00)** | **(2,018,682.00)** | | | |
| | | | | 16,389,160.83 | 6,004,808.60 | **955,784.28** | **6,960,592.88** | **9,428,567.95** |
| **6. கண்காட்சிச் சாவடி** | 25% | | | | | | | |
| அ) கண்காட்சிச் சாவடி | | 127,429.75 | 0.00 | 127,429.75 | 127,429.75 | 0.00 | 127,429.75 | **0.00** |
| ஆ) திரைச்சீலைகள் | | 37,690.00 | 0.00 | 37,690.00 | 25,265.00 | 9,422.50 | 34,687.50 | **3,002.50** |
| இ) மேசை விரிப்புகள் | | **0.00** | **258,750.00** | **258,750.00** | **0.00** | **0.00** | **0.00** | **258,750.00** |
| | | **165,119.75** | **258,750.00** | **165,119.75** | **152,694.75** | **9,422.50** | **162,117.25** | **261,752.50** |
| 7. ஒளி எறிவுக் கருவி மற்றும் நிழற்படக் கருவி | 20% | **1,715,068.50** | **0.00** | **1,715,068.50** | **1,489,580.50** | **225,488.00** | **1,715,068.50** | **0.00** |
| 8. தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடாக்களும் பதிவிகளும் | 20% | **162,000.00** | **0.00** | **162,000.00** | **122,570.00** | **12,140.00** | **134,710.00** | **27,290.00** |
| 9. அலுவலக பொருத்துகள் | 15% | **1,016,868.76** | **0.00** | **1,016,868.76** | **759,599.05** | **132,509.81** | **892,108.86** | **124,759.90** |
| | | **22,209,563.15** | **10,652,390.44** | **32,603,203.59** | **18,838,918.31** | **2,941,890.14** | **19,762,126.45** | **11,081,145.14** |

| வருடம் | அரச பங்களிப்பு மூலதனம் ரூபா. |
|---|---|
| 1991 | 163,050.00 |
| 1992 | 1,700,000.00 |
| 1993 | - |
| 1994 | 250,000.00 |
| 1995 | 196,000.00 |
| 1996 | 113,500.00 |
| 1997 | 757,000.00 |
| 1998 | 1,700,000.00 |
| 1999 | 290,000.00 |
| 2000 | 4,500,000.00 |
| 2001 | 2,870,000.00 |
| 2002 | 700,000.00 |
| 2003 | 2,500,000.00 |
| 2004 | 621,000.00 |
| 2005 | 5,997,000.00 |
| 2006 | 33,991,000.00 |
| 2007 | 37,100,000.00 |
| 2008 | 24,106,000.00 |
| 2009 | 15,765,000.00 |
| 2010 | 4,500,000.00 |
| 2011 | 6,151,010.00 |
| 2012 | 21,562,000.00 |

**காசுப் பாய்ச்சல் கூற்று**

| | 31 டிசம்பரில் முடிவுற்ற வருடத்திற்கு 2012 | | |
|---|---|---|---|
| **தொழிற்பாட்டு செலவினங்களிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| வருடத்திற்கான நட்டம்/மிகை | | (21,929,985.80) | |
| **காசுப் பெயர்ச்சிக்குள் உட்படாத உருப்படிகளில் சீராக்கம்** | | | |
| பொறுமாத் தேய்வு | 2,941,890.14 | | |
| பணிக்கொடை ஏற்பாடு | 363,189.37 | | |
| வாகன விற்பனைக்கான இலாபம் | (4,247,537.75) | | |
| | | (942,458.24) | |
| தொழில்பாட்டு சொத்துகள்/ பொறுப்புகளில் மாற்றங்கள் ஏற்படும் மின்னர் தொழிற்பாட்டு இலாபம் | | (22,872,444.04) | |
| **தொழில்பாட்டு சொத்துகள்/ பொறுப்புகளில் வீழ்ச்சி/அதிகரிப்பு** | | | |
| அனர்த்த கடன் | 97,368.00 | | |
| ஏனைய முற்பணங்கள் | 136,632.80 | | |
| புத்தாக்குனர் கடன் நிதியம் | 147,544.00 | | |
| பண்டிகை முற்பணம் | 5,500.00 | | |
| ஏனைய ஒப்பந்த சேவை | 0.00 | | |
| பணிக்கொடை ஏற்பாடு | (527,716.50) | | |
| நிலுவைச் செலவினங்கள் | 2,929,746.29 | 2,789,074.59 | |
| **தொழில்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | | | (20,083,369.45) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு பாய்ச்சல்** | | | |
| நிலையான சொத்து கொள்வனவு | | (1,802,390.44) | |
| நிலையான சொத்து விற்பனை | | 4,247,537.75 | |
| அமைச்சுக்கு விற்பனை வரும்பு | | (2,969,760.00) | |
| | | | (524,612.69) |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | | |
| அரச பங்களிப்பு - மூலதனம் | | | 21,562,000.00 |
| தேறிய காசும், காசிற்குச் சமமானவையும் (அதிகரிப்பு/வீழ்ச்சி) | | | 954,017.86 |
| **வருட தொடக்கத்தில் காசும் காசிற்குச் சமமானவையும்** | | | |
| **காசு/வங்கி மீதி** | | | 3,409,438.49 |
| **வருட இறுதியில் காசும்,காசிற்குச் சமமானவையும்** | | | |
| **காசு/வங்கி மீதி** | | | 4,363,456.35 |

## கணக்கியல் கொள்கைகள்

1. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது.

### 2. ஒப்புமை கூற்று

ஆணைக்குழுவானது இலங்கை பட்டய கணக்கறிஞர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட கணக்கியல் கட்டளைச் சட்டங்களுடனும் மற்றும் 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கியல் மற்றும் கணக்காய்வு கட்டளைச் சட்டத்துடனும் ஒத்தியல்கின்றன.

### 3. தயாரிப்பின் அடிப்படை

வரலாற்றுக் கிரய அடிப்படையில் தொடர்ச்சியாக மாறாது, இலங்கை கணக்கியல் கட்டளைச் சட்டங்களுடன் ஒத்தியல்கின்ற வகையில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### 4. நிதியம்

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவிற்கு அரசினால் வழங்கப்படும் நிதியமானது, அரசின் வருடாந்த மதிப்பீட்டில் இரு பிரதான வகுதிகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது அவையாவன:

1. நடப்புச் செலவினத்திற்கான நிதியம்
2. மூலதன செலவினத்திற்கான நிதியம்

வருமான செலவின மானியமானது வருமான செலவின கணக்கிற்கு எடுத்துச்செல்லப்படும் அதே வேளையில் மூலதன செலவின மானியமானது நேரடியாக மூலதன க/கு இற்கு திரட்டப்பட்ட நிதியம் எனும் பெயரில் எடுத்து செல்லப்படும்.

ஆணைக்குழுவின் மீண்டு வரும் செலவினமானது வருமான செலவின கணக்கில்:

1. நிர்வாக மற்றும் தாபிப்பு செலவினம்
2. வருமான செலவின கணக்கில் செயற்றிட்ட செலவினமாக பதிவழிப்பு செய்யப்படும்.

1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர் ஊக்குவிப்பு சட்டத்தில் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை பூரண நிறை வேற்றம் செய்வதற்கு, ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொடர்பிலான செலவினங்ககள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினங்களாக காட்டப்படும்

### 5. பெறுமானத் தேய்வு

நிலையான சொத்தின் பெறுமானத் தேய்வானது, நேர் கோட்டு அடிப்படையில் செய்யப்படுகின்றது நிலையான சொத்துக்களை அதனது பாவனைக்கலம் முடிவில் பதிவழிக்கும் நோக்குடன் பின்வரும் வீதத்தில் பெறுமானத் தேய்வு கணிப்பீடு மேற்கொள்ளப் படுகின்றது.

| | | **வீதம்** |
|---|---|---|
| அ) | தளபாடமும் உபகரணமும் | 15% |
| ஆ) | அலுவலக உபகரணமும் | 20% |
| இ) | மூலவகைமாதிரிகளும் பெயர் பலகை | 10% |
| ஈ) | நூலக புத்தகங்கள் | 10% |
| உ) | வாகனங்கள் | 20% |
| ஊ) | கணகாட்சி கூடங்கள் | 25% |

2006 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மேற்காட்டப்பட்ட நிலையான சொத்துகள் நிமித்தம் மேலே காட்டப்பட்ட வீதத்தில் பெறுமானத் தேய்வு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

### 6. காசுப்பாய்ச்சல் கூற்று

இலங்கை கணக்கியற் கட்டளைச் சட்டம் 09 இற்கு அமைவுற நேரடியற்ற முறையில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

### 7. ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக் கொடை கொடுப்பனவு சட்டத்திற்கு அமைவுற பதவியணியினருக்கு பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நிலுவைச் செலவினங்கள் - 2012**

நாட்குறிப்பு பதிவுகள் 2012

| திகதி | விவரணம் | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|---|
| **31.12.2012** | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 14,375.00 | |
| | நிலுவை எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | | 14,375.00 |
| | **(2012 ஆம் ஆண்டுக்குரிய நிலுவை எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் பதிவு)** | | |
| | தொலை பேசி கட்டணம் | 18,946.11 | |
| | நிலுவை தொலை பேசி கட்டணம் | | 18,946.11 |
| | **(2012 ஆம் ஆண்டுக்குரிய நிலுவை தொடர்பாடல் பதிவு)** | | |
| | மின்சார க/கு | 51,421.60 | |
| | நிலுவை மின்சார க/கு | | 51,421.60 |
| | **(2012 ஆம் ஆண்டுக்குரிய நிலுவை மின்சாரம் பதிவு)** | | |
| | பிரதீபா சுயாதீன தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் | 3,833,540.00 | |
| | **நிலுவை பிரதீபா சுயாதீன தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம்** | | 3,833,540.00 |
| | **(2012 ஆம் ஆண்டுக்குரிய பதிவு)** | | |
| | தளபாடம் கருவிகள் பெறுமானத் தேய்வு | 115,301.58 | |
| | தளபாடம் கருவிகளுக்கான பெறுமானத் தேய்வு | | 115,301.58 |
| | அலுவலக உபகரண பெறுமானத் தேய்வு | 1,471,804.58 | |
| | அலுவலக உபகரணங்களுக்கான பெறுமானத் தேய்வு | | 1,471,804.58 |
| | மூலவகை மாதிரிகள் பெயர்பலகைகள் பெறுமானத்தேய்வு | 11,080.50 | |
| | மூலவகை மாதிரிகள் பெயர்பலகைகளுக்கான பெறுமானத்தேய்வு | | 11,080.50 |
| | நூலக புத்தகங்கள் பெறுமானத்தேய்வு | 8,358.90 | |
| | நூலக புத்தகங்களுக்கான பெறுமானத்தேய்வு | | 8,358.90 |
| | வாகன பெறுமானத்தேய்வு | 955,784.28 | |
| | வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு | | 955,784.28 |
| | கண்காட்சிக் கூடம் பெறுமானத்தேய்வு | 9,422.50 | |
| | கண்காட்சிக் கூடங்களுக்கான பெறுமானத்தேய்வு | | 9,422.50 |
| | ஒளி எறிவுக்கருவி மற்றும் நிழற்பதிவுப் பெட்டி பெறுமானத்தேய்வு | 225,488.00 | |
| | ஒளி எறிவுக்கருவி மற்றும் நிழற்பதிவுப் பெட்டிக்கான பெறுமானத்தேய்வு | | 225,488.00 |
| | தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா பதிவு பெறுமானத்தேய்வு | 12,140.00 | |
| | தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா பதிவுக்கான பெறுமானத்தேய்வு | | 12,140.00 |
| | அலுவலக பொருத்துகள் பெ.தேய்வு | 132,509.81 | |
| | அலுவலக பொருத்துக்களுக்கான பெ.தேய்வு | | 132,509.81 |

## 2012/12/31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி

| விபரங்கள் | 2012/12/31 இல் உள்ளவாறான மீதி (நாட் குறிப்புகளுடன்) | |
|---|---|---|
| | வரவு | செலவு |
| சம்பளங்களும், கூலிகளும் | 2,911,334.22 | 0.00 |
| வாழ்க்கைப்படி செலவினம் கடமையாற்றல் | 816,367.50 | 0.00 |
| விசேட படிகள் | 355,045.60 | 0.00 |
| ஊ.சே.நி. பங்களிப்பு | 585,474.15 | 0.00 |
| ஊ.ந.பொ. பங்களிப்பு | 113,325.10 | 0.00 |
| பதில் படிகள் | 114,966.00 | 0.00 |
| பண்டிகை முற்பணம் | 8,800.00 | 0.00 |
| ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு வேதனம் | 780,310.00 | 0.00 |
| பிரயாணம் – உள்ளூர் | 96,854.67 | 0.00 |
| மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 394,383.12 | 0.00 |
| காகிதாயிதிகள் | 179,126.73 | 0.00 |
| எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் | 550,361.00 | 0.00 |
| பயன்பாடுகள் | 95,634.00 | 0.00 |
| வாகனம் - திருத்தலும், பேணுகையும் | 1,620,176.22 | 0.00 |
| அலுவலக உபகரணங்கள் - திருத்தலும், பேணுகையும் | 72,464.16 | 0.00 |
| தொடர்பாடல் | 256,404.99 | 0.00 |
| தபாற் செலவினம் | 9,325.00 | 0.00 |
| மின்சாரம் | 554,125.80 | 0.00 |
| தண்ணீர் | 49,253.44 | 0.00 |
| ஏனைய ஒப்பந்த சேவைகள் | 562,506.32 | 0.00 |
| வாடகை | 5,303,900.40 | 0.00 |
| கணக்காய்வுக் கட்டணம் | 0.00 | 0.00 |
| சுத்திகரிப்புச் சேவை | 162,000.00 | 0.00 |
| கேளிக்கைச் செலவினம் | 70,692.00 | 0.00 |
| புதினப் பத்திரிகை,பருவச்சஞ்சிகைகள் | 29,040.00 | 0.00 |
| ஏனைய நிர்வாக செலவினம் | 86,324.00 | 0.00 |
| அனர்த்தக் கடன் | 646,590.00 | 0.00 |
| அனர்த்தக் கடன் வட்டி | 0.00 | 22,151.44 |
| அரச பங்களிப்பு - மூலதனம் | 0.00 | 21,562,000.00 |
| அரச பங்களிப்பு - நடப்பு | 0.00 | 17,992,000.00 |
| எரிபொருள் வைப்புகள் | 100,000.00 | 0.00 |
| முற்பணம் | 186,384.80 | 0.00 |
| ஜனாதிபதி விருது வைபவம் | 7,097,442.75 | 0.00 |
| சர்வதேசக் கண்காட்சி | 0.00 | 903,399.52 |
| பிரசுரிப்பும் பரப்புதலும் | 0.00 | 0.00 |
| ஏனைய ஒப்பந்த சேவைகளுக்கான முற்கொடுப்பனவு | 341,088.44 | 0.00 |
| தளபாட உபகரணங்கள் | 919,998.08 | 0.00 |

| | | |
|---|---|---|
| தளபாட உபகரணங்களின் திரட்டப்பட்ட பொறுமானத் தேய்வு | 0.00 | 630,198.19 |
| அலுவலக உபகரணங்கள் | 11,115,093.91 | 0.00 |
| அலுவலக உபகரணங்களின் திரட்டப்பட்ட பொறுமானத் தேய்வு | 0.00 | 8,879,810.95 |
| மூலவகை மாதிரிகளும், பெயர்ப் பலகைகளும் | 227,380.50 | 0.00 |
| மூலவகை மாதிரிகளும், பெயர்ப் பலகைகளின் திரட்டப்பட்ட பொறுமானத் தேய்வு | 0.00 | 183,980.15 |
| நூலக புத்தகங்கள் | 201,716.38 | 0.00 |
| நூலக புத்தகங்கள் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு | | 193,359.08 |
| வாகனம் | 10,513,627.11 | 0.00 |
| வாகனங்களின் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு | 0.00 | 10,487,107.05 |
| கண்காட்சிச் சாவடி | 174,542.25 | 0.00 |
| கண்காட்சிச் சாவடிகளின் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு | 0.00 | 162,117.25 |
| ஒளி எறிவுக் கருவியும், நிழற்பதிவுப் பெட்டியும் | 1,965,829.52 | 0.00 |
| ஒளி எறிவுக் கருவியும், நிழற்பதிவுப் பெட்டியின் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு | 0.00 | 1,715,068.50 |
| தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா பதிவுப் பெட்டி | 174,140.00 | 0.00 |
| தொலைக்காட்சி மற்றும் கட்புல நாடா பதிவுப் பெட்டியின் திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு | 0.00 | 134,710.00 |
| அலுவலக பொருத்துக்கள் | 1,149,378.57 | 0.00 |
| அலுவலக பொருத்துக்களின் திரட்டப்பட்ட பொறுமானத் தேய்வு | 0.00 | 892,108.86 |
| திரட்டப்பட்ட நிதியம் | 0.00 | 10,087,396.53 |
| மீளளிக்கத்தக்க கேள்விமனு வைப்புகள் | 50,000.00 | 91,087.20 |
| கடன் கொடுத்தோர் | 0.00 | 82,860.65 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 527,716.50 | 1,467,441.38 |
| பாராளுமன்ற விவகாரங்களும் அமுலாக்கலும்(NAITA) | 7,560.00 | 0.00 |
| கல்வி அமைச்சு | 0.00 | 46,305.00 |
| மானெல் காந்தி | 0.00 | 503.27 |
| தேர்தல் ஆணையாளர் | 13,524.50 | 0.00 |
| பொலனறுவை மாவட்ட புத்தாக்குனர் நிதியம் | 0.00 | 21,074.75 |
| ஏனைய வருமானம் | 0.00 | 1,280,022.45 |
| நிதி தொழில் நுட்ப உதவி | 20,695.00 | 0.00 |
| சில்லறை காசு | 21,438.45 | 0.00 |
| காசு T/F | 772,501.28 | 0.00 |
| காசு p/f | 3,423,175.07 | 0.00 |
| புத்தாக்குனர் நிதியம் | 0.00 | 2,522,375.59 |
| கடன் வட்டி | 0.00 | 6,249.19 |
| புத்தாக்குனர் நிதியக் கடன் | 9,756,793.80 | 0.00 |
| உள்நாட்டு இறைவரி திணைக்களம் | 95,600.00 | 0.00 |
| வலைக்கடப்பீட விருத்தி | 381,151.16 | 0.00 |
| புத்தாக்கங்களை ஒழுங்குபடுத்தல் | 0.00 | 0.00 |
| பள்ளிக்கூட புத்தாக்க சங்கங்களை மீண்டும் செயற்படவைத்தல் | 73,961.80 | 0.00 |
| தேசிய மட்ட கண்காட்சி | 0.00 | 0.00 |
| சம்பள முற்பணம் | 0.00 | 0.00 |

| | | |
|---|---|---|
| **நிலுவைச் செலவினங்கள்** | 0.00 | 0.00 |
| எரிபொருள் மசகு எண்ணெய் | 0.00 | 14,375.00 |
| தொடர்பாடல் | 0.00 | 18,946.11 |
| மின்சாரம் | 0.00 | 51,421.60 |
| பிரதீபா சுயாதீன தொலைக்காட்சி சேவை | 0.00 | 3,833,540.00 |
| கணக்காய்வு கட்டணம் | 0.00 | 920,000.00 |
| பணிக் கொடை ஏற்பாடு | 0.00 | 0.00 |
| சஹசக் நிமவும் | 478,952.23 | 0.00 |
| சர்வதேச கண்காட்சியில் பங்கு பெறல் | 814,693.51 | 0.00 |
| பதவியணி விருத்தி | 62,665.00 | 0.00 |
| புத்தாக்குனர்களுக்கான தேசிய கருத்தரங்கு | 54,360.00 | 0.00 |
| புத்தாக்குனருக்கான தேசிய கருத்தரங்கு | 241,018.38 | 0.00 |
| Learn தொலைக் காட்சி சேவையில் ஒளிபரப்புதல்<br>தேசிய புத்தாக்க மாதத்தினை கொண்டாடுதல் | 12,791,667.80 | 0.00 |
| இன்கோ நிகழ்ச்சித்திட்டம் | 1,610.00 | 0.00 |
| தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி | 48,910.00 | 0.00 |
| பிரபிதா சுயாதீன தொலைக்காட்சி | 3,972,208.50 | 0.00 |
| **மொத்தம்** | **84,201,609.71** | **84,201,609.71** |

2012 ஆம் ஆண்டிக்கு பணிக் கொண்டஒதுக்கீடு

| பதவி | பெயர் | நியமன வருடம் | சம்பளம் 2012இல் | விசேட படிகள் | வாழ்க்கை படி செலவினம் | மொத்த சம்பளம் | சேவைக் காலம் வருடங்க ளில் | பணிக்க ொடை ஒதுக்கீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| D/D | பி.எம். சோமசிங்க | 1994 | 34550 | 5182.5 | 5850 | 45,582.50 | 18 | 410,242.50 |
| A/D | கெ.கெ.பு.என்.கணபிடிய | 1999 | 27,540 | 4,131 | 5,850 | 37,521.00 | 13 | 243,886.50 |
| CL | எம்.யுடி.கெ சேனநாயக | 1999 | 8,364 | 1,254 | 3,315 | 12,933.00 | 13 | 84,064.50 |
| AO | டபிள்யு.யு.எம்.எ.கெ.விக்ர மகே | 1999 | 20,525 | 3,079 | 5,850 | 29,453.75 | 13 | 191,449.38 |
| DR | டி.பி. செனவிரட்ன | 1993 | 15,460 | 2,319 | 5,850 | 23,629.00 | 19 | 224,475.50 |
| DR | பி.ஆர்.எ.எஸ்.ரணசிங்க | 1996 | 15,010 | 2,252 | 5,850 | 23,111.50 | 16 | 184,892.00 |
| MA | எம்.ஆர்.எம் அருஸ் | 1993 | 15,045 | 2,256 | 5,850 | 23,151.00 | 19 | 219,934.50 |
| PO | கெ.கெ.டி.எஸ்.வி.ரணவீர | 2005 | 20,525 | 3,079 | 5,850 | 29,453.75 | 7 | 103,088.13 |
| PO | எச்.கெ.சி.எல்.கெ ஒடிப்பில்லி | 2005 | 20,525 | 3,079 | 5,850 | 29,453.75 | 7 | 103,088.13 |
| PO | கெ.எல்.சி.டி. செனவி விக்ரம | 2009 | 20,525 | 3,079 | 5,850 | 29,453.75 | 3 | 44,180.63 |
| MA | என்.டி.சிரிவர்தன | 2010 | 13,460 | 2,019 | 5,850 | 21,329.00 | 2 | 21,329.00 |
| | | | | | | **305,072.00** | | **1,830,630.75** |

| | | |
|---|---|---|
| 2011.12.31.இல் உள்ளவாறான ஒதுக்கீடு | | 1,467,441.38 |
| 2012 ஆம் ஆண்டிக்கு ஒதுக்கீடு | | 1,830,630.75 |
| | | **363,189.37** |
| **2012 ஆம் ஆண்டில் கொடுப்பனவு** | | |
| இராஜினாமா செய்த அலுவலர் | 117,474.00 | |
| ஓய்வு பெற்ற அலுவலர் | 410,242.50 | |
| | **527,716.50** | |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல / My No } எல்எஸ்/எப்/எஸ்எல்ஜீ/ எய்ஜ/2012 ඔබේ අංකය / உமது இல / Your No. } දිනය / திகதி / Date } 2013 ஒக்டோபர் 10

ஆணையாளர்,
இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு

**இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 53ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 27 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு 2013 மே 02 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone } 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඊමේල් ලිපිනය / ஈ- மெயில் / E-mail } oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆளைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆளைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முறைப்பாடியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009 ஆம் ஆண்டின் போது ஆணைக்குழுவின் பெயரில் பதிவுசெய்த ஒரு வாகனம் ரூபா 3,528,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் ரூபா 12,651,041 பெறுமதியான 03 நாட்குறிப்புக்கள் கணக்குகளில் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வுக் கட்டணத்திற்கான ரூபா 920,000 தொகையான ஏற்பாடு கணக்குகளில் தவிர்க்கப்பட்டிருந்தன.

(ஈ) மேசை விரிப்புக்களைத் தைப்பதற்காக ரூபா 258,750 தொகைக்கு கொள்வனவு செய்த புடவைகளின் பெறுமதி அலுவலக உபகரணக் கணக்கிற்கும் மேசை விரிப்புக் கணக்கிற்கும் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(உ) ஆண்டிற்கான பணிக்கொடைக்கான ஏற்பாடு ரூபா 210,833 ஆல் அதிகரித்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் சேவையை விட்டு விலகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்காக பணிக்கொடை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதும் அந்த விலகிச் சென்ற உத்தியோகத்தருக்காகவும் ரூபா 494,306 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) வாகனத்திற்கான வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 936,144 தொகையால் அதிகரித்து கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் திரண்ட பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 7,533,215 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,960,592 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்கான ரூபா 3,918,282 தொகையான அட்டுறுச் செலவுகள் கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக ஆண்டிற்கான செலவு அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) பத்தரமுல்லை பிரதேசத்தில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களுக்காகச் செலுத்தப்பட்ட மீளப்பெறக்கூடிய ரூபா 125,000 தொகையான வைப்புப் பணத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கீழே குறிப்பிடப்பட்ட ரூபா 1,073,651 தொகையான 04 மீதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தவிர்க்கப்பட்டிருந்தன.

| | ரூபா |
|---|---|
| கடன்கொடுத்தோர் கணக்கின் ஆரம்ப மீதி | 82,860 |
| சர்வதேச கண்காட்சிக்காகச் செலுத்தப்பட்ட செலவு | 903,399 |
| கல்வி அமைச்சிற்குச் செலுத்திய பணம் | 46,305 |
| மீளச் செலுத்த வேண்டிய கேள்விவைப்பு | 41,087 |
| | 1,073,651 |

(ஒ) ஆணைக்குழுவின் இரண்டு வாகனங்களை விற்பனை செய்வதற்காக மீள்மதிப்புச் செய்ததிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,750,000 தொகையான மீள்மதிப்பு இலாபம் ஒதுக்கக் கணக்கிற்கு மாற்றம் செய்யப்படாது ஏனைய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) மீளாய்வாண்டின் போது புத்தாக்குனர்களிற்கு வழங்கப்பட்டிருந்த கடனுக்காகக் கிடைத்த ரூபா 37,496 தொகையான வட்டி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) "சகசக் நிமெவும்" தேசிய கண்காட்சி மற்றும் "பிரதிபா பிரபா" தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தனியார் நிறுவனங்களிலிருந்து அனுசரணையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 9,050,000 தொகையை கணக்கீடு செய்வதற்கு

அல்லது கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்காக கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளுக்கும் அது தொடர்பாக பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட மீதிகளுக்குமிடையே பின்வரும் வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டதுடன் அம்மீதிகள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

| | நிதிக்கூற்றுக்களின் படி மீதி | பேரேட்டுக் கணக்குகளின் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாகனங்கள் | 16,389,160 | 9,557,842 | 6,831,318 |
| அலுவலக உபகரணங்கள் | 9,921,949 | 9,643,289 | 278,660 |
| நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வு | 2,941,890 | - | 2,941,890 |
| திரண்ட நிதியம் | 10,087,396 | 11,612,148 | 1,524,752 |
| ஏனைய வருமானம் | 4,247,537 | 1,280,026 | 2,967,511 |
| புத்தாக்குனர்கள் நிதியம் | 2,543,450 | 2,522,375 | 21,075 |
| புத்தாக்குனர்கள் கடன்நிதியம் | 9,634,260 | 9,773,114 | 138,854 |

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டுவரும் ரூபா 498,804 தொகையான பெறவேண்டிய 04 கணக்கு மீதிகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் 12 புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,200,000 தொகையான கடன் தொகையில் 2012 திசெம்பர் 31 வரை ரூபா

565,740 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 10 புத்தாக்குனர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 8,200,000 தொகையான கடன்கள் மீளச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் கணக்கு விடயங்களுக்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் | 32,603,203 | பட்டோலை, பௌதீக மெய்மையாய்வு அறிக்கை |
| வங்கியிலும் கையிலுமுள்ள காசு | 4,363,456 | மீதிகளை உறுதிப்படுத்தல் |
| முற்பணங்கள் | 136,633 | பட்டோலை |
| முற்கொடுப்பனவுகள் | 341,088 | பட்டோலை |

### 2.2.5 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணம்<br>135, 136 | நிதிப்பிரமாண அறிவுறுத்தல்களுக்கு முரணாக ஆணைக்குழுவின் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பீடு தயாரிப்பதிலிருந்து பட்டியல்களைத் தீர்த்துவைப்பது வரையான அனைத்து செயற்பாடுகளும் ஓரே குழுவினாலேயே மேற்கொள்ளப்பட்டன. |
| (ஆ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய அரச நிதி சுற்றுநிருபம் இல. 438(2) மற்றும் நி.பி 756, 757, 771 | 2011 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வின் போது விற்றுத் தீர்க்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட 67 பொருட்கள் தொடர்பாக சுற்றுநிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகள் ரூபா 21,929,985 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான தொடர்புபட்ட பற்றாக்குறை ரூபா 7,675,762 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 14,254,223 தொகையால் நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்காக புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் செலவுகள் ரூபா 19 மில்லியனாலும் ஏனைய செலவுகள் ரூபா 05 மில்லியனாலும் அதிகரித்தலும் மொத்த வருமானம் ரூபா 10 மில்லியனாலும் அதிகரித்தல் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறையைவிட ரூபா 14 மில்லியனால் அதிகரித்திருந்தது. புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் செலவுகள் ரூபா 19 மில்லியனால் அல்லது 604 சதவீதத்தால் அதிகரித்தமை அதற்கு முக்கிய காரணமாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான எரிபொருள் செலவு வாகன பழுதுபார்த்தல்களும் மேற்பார்வையும், ஏனைய செலவுகள் என்பன முறையே 105 சதவீதத்தாலும், 201 சதவீதத்தாலும் 156 சதவீதத்தாலும் முன்னைய ஆண்டிற்கான செலவை மிகைத்து அதிகரித்திருந்தன. மீளாய்வாண்டிற்கான செலவு முன்னைய ஆண்டிற்கான செலவுகளை மிகைத்து அதிக சதவீதத்தால் அதிகரித்து நிதி விளைவுகள் தொடர்பாக பாதகமாக தாக்கமளித்திருந்தது.

முன்னைய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 12 மில்லியன் அரசாங்க மானியம் மீளாய்வாண்டின் போது 50 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 18 மில்லியன் கிடைத்திருந்த போதிலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையைக் குறைப்பதற்கு அது போதியதாக இருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தாக்குனர்களின் நிதியத்திலுள்ள ரூபா 2,522,375 தொகையையும் பொலன்னறுவை மாவட்ட நிதியத்திலுள்ள ரூபா 21,075 தொகையான வட்டியையும் ஒருங்கிணைத்து புத்தாக்குனர்களின் நிதியமாக ரூபா 2,543,450 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. புதிய நிதியத்தை தோற்றுவிக்கும் நோக்கம் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிதியக் கணக்கு மீதி பல வருட காலமாக நிலவியதுடன் நிதியத்திற்குரிய சொத்துக்களை இனங்காண்பதற்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் அங்கீகரித்த பதவியணியினர் 24 ஆக இருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறைவேற்று மற்றும் நிறைவேற்று தரமற்ற 13 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) ஆணைக்குழுவின் 04 வாகனங்களை ஓடுவதற்காக இரண்டு சாரதிகள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

### 4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

புத்தாக்குனர்களுக்கு கடன் வழங்குவதற்கும் கடன்களை அறவீடு செய்வதற்குமாக ஆரம்பிக்கப்பட்ட வங்கிக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,590,955 மீதி காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டிலிருந்து அக்கணக்கு செயற்பாடற்றுக் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) கடன்களை அறவீடு செய்தல்

(இ) முற்பணங்களைச் செலுத்துதல்

(ஈ) வாகனக் கட்டுப்பாடு

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ns/Sd*

கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயக திணைக்களம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி,
**பத்தரமுல்ல.**

**1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2)(இ) ஆம் பிரிவின் நியதிகளின் படியாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் 2012 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கு பணிப்பாளர் சபையினரின் அவதானிப்புகள்.**

2.2.2 கணக்கியற் குறைபாடுகள்

(அ) 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதும் KI - 0614 எனும் இலக்கத்தை கொண்டதும் 3,528,000/- பெறுமானத்தையுடையதுமான வாகனமானது, ஜனாதிபதி நிதியத்தினால் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டது, அத்துடன் இதன் பெறுமானத்திற்கு சமனான தொகையானது வினைமுயலுமை அபிவிருத்தி மற்றும் முதலீட்டு மேம்படுத்துகை அமைச்சின் விடய குறிமுறையிடமிருந்து அறவீடு செய்யப்படுதல் வேண்டும். இவ் விடயம் தொடர்பிலான ஆவணங்கள் எமது அமைச்சில் இல்லாததினால் அவ் ஆவணங்களை இலங்கை சுங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டு அவற்றை உங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.இதற்கமைவுற குறிப்பிட்ட இந்த KI - 0614 எனும் இலக்கத்தை கொண்ட வாகனம் தொடர்பில் கடந்த 03 வருடங்களுக்குரிய பெறுமானத் தேய்வானது கீழ்வறுமாறு ஒதுக்கீடு செய்ய நடவடிக்ககைகள் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்குறிப்பு - 12

| | |
|---|---|
| வாகன கணக்கு (வரவு) | - 3,528,000/- |
| அரச மானியங்கள் | - 3,528,000/- |

(KI - 0614 எனும் இலக்கத்தை கொண்ட வாகனம் கணக்குகளில் சொத்தாக பதியப்பட்டது)

நாட்குறிப்பு - 13

| | |
|---|---|
| வாகன கணக்கு (வரவு) | - 2,822,400/- |
| திரட்டப்பட்ட பெ.தேய்வு ஒதுக்கீடு | - 2,822,400/- |
| அரச மானியம் | - 2,822,400/- |

(2009 - 2012 ஆம் ஆண்டு வரை செய்யப்பட்ட பெ.தேய்வு ஓதுக்கீடு கணக்குகளில் பதியப்பட்டது)

(இ) ஜனாதிபதி செயலகத்தின் அறிவுறுத்தல்களை தொடர்ந்து தவிர்க்க முடியாத ஒரு காரணத்தினால் 2011 டிசம்பர் மாதம் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட ஜனாதிபதி விருது வைபவமானது நடாத்தப்படவில்லை அதன்பின்பு இவ்வைபவத்தை 2012 ஜனவரி மாதம் 2ஆம் திகதி நடாத்துவதற்கு ஜனாதிபதி செயலகம் அநுமதியினை வழங்கியது எவ்வாறாயினும் அந்நேரத்திற்குள் வைபவம் தொடர்பிலான ஆரம்ப நிலை ஒத்திகை நடவடிக்கைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களாவன 2011 ஆம் ஆண்டின் கணக்கியல் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) கணக்காய்வு கட்டணமாக கொடுக்கப்பட வேண்டிய தொகை என்ற அடிப்படையில் நிதி அறிக்கைகளில் ரூபாய் 920,000/- காட்டப்பட்டிருந்த போதிலும் இத் தொகையானது ரூபாய் 889,198/- என்றே கணக்காய்வாளர் நாயகத்தின் 2012/10/17 எனும் திகதியையுடையதும்

(ஈ) S-17/5/rem 2012 எனும் இலக்கத்தை கொண்டதுமான கடிதத்தில் காட்டப்பட்டுள்ளது. இதற்கமைவுற கொடுக்கப்பட வேண்டிய கணக்காய்வு கட்டண மிகுதித் தொகையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாற்குறிப்பு - 14

| | |
|---|---|
| செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணம் (வரவு) | - 30802/- |
| ஏனைய வருமானங்கள் | - 30802/- |

(செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டண மிகுதியை திருத்தம் செய்தல்)

(உ) மேசைவிரிப்புகள் தைப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட துணிகளின் பெறுமதியானது, நிலையான சொத்து பதிவேட்டில், அலுவலக உபகரணங்கள் கணக்கில்

பதியப்பட்டுள்ளது.பதியப்பட்ட பெறுமானம் ரூபாய் 283,500/- ஆகும். அது கீழ்வறுமாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| துணிகளின் கிரய விலை (பற்றுச்சீட்டு இலக்கம் 476/2012) | - ரூபா 258,750/- |
| தையல்கட்டணம் (பற்றுச்சீட்டு இலக்கம் 488/2012) | - ரூபாய் 24,750/- |
| மொத்தப் பெறுமானம் | - ரூபாய் 283,500/- |

இதனைத் தொடர்ந்து இந்த கணக்கியல் வழுவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) பணிக் கொடை தொடர்பில் ஒதுக்கப்பட்டிருந்த மேலதிக ஒதுக்கீடு ரூபாய் 283,650/- இனை கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(எ) பணிக்கொடை கணக்கியல் மேலதிகமாக தவறுதலாக பதியப்பட்டுள்ள ரூபாய் 210,653/- இனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கட்டுள்ளது.

நாட்குறிப்பு - 15

| | |
|---|---|
| பணிக் கொடை ஒதுக்கீட்டிற்கான கணக்கு (வரவு) | - ரூபாய் 210,653/- |
| பணிக் கொடை செலவினங்கள் | - ரூபாய் 210,653/- |

(ஏ) வாகனக் கணக்கு தொடர்பில் பெறுமானத்தேய்வு கீழ்வறுமாறு திருத்தப்பட்டுள்ளது.

நாட்குறிப்பு 16

1. திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்கு (வரவு) - ரூபாய் 955,784/-
   பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்கு - ரூபாய் 955,784/-
   (பெறுமானத் தேய்வினை தவறாக கணிப்பீடு செய்தல் தொடர்பிலான தவறை திருத்துதல்)

நாட்குறிப்பு 17

2. பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்கு (வரவு) - ரூபாய் 19,640/-
   திரட்டப்பட்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு கணக்கு - ரூபாய் 19,640/-
   (பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டினை கணக்குகளில் பதிதல்)

(ஐ) திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வில் க/கு இல் காணப்படும் வித்தியாசத்தை திருத்துவதற்கு கீழ் வறுமாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நாட்குறிப்பு 18

பெறுமானத் தேய்வு கணக்கு (வரவு) - ரூபாய்572,623/-

திரட்டப்பட்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டிற்கான கணக்கு - ரூபாய் 572,623/-

(பெறுமானத் தேய்வு கணிப்பீடு தொடர்பிலான திருத்துதல்)

(ஒ) சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்புக்கு கொடுக்கப்பட வேண்டிய ரூபாய் 3,918,282/- தொகையினை செலவின கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஓ) பத்தரமுல்லையில் அமைந்துள்ள வாடைக்கு எடுக்கப்பட்ட கட்டிடத்தின் சொந்தக்காரர் மீளளிப்பு செய்யப்படும் என்ற அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபாய் 125,00/- இனை தம்மிடம் தக்க வைத்துள்ளர்.

இவ்விடயத்துடன் தொடர்புடைய சகல கோப்புகளும் 2011 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர்களால் எடுத்துச் செல்லப்பட்டமையினால் இவ்விடயம் தொடர்பில் எது வித கோப்புகளும் தற்போது ஆணைக்குழுவின் வசம் இல்லை. இவ் விடயத்தை கட்டிட உரிமையாளரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு பல நினைவூட்ல்களை அனுப்புவதன் மூலம் ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்தது.எனினும்.ஆணைக்குழுவானது கட்டிடத்திற்கு வதிவுக்கு செல்லுமிடத்து ஆணைக்குழுவினரால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் ஆணைக்குழுவினால் கொடுக்கப்பட வேண்டிய நீர்,தண்ணீர் மற்றும் தொலை பேசிக் கட்டம் என்பவை தொடர்பிலும் இந்த ரூபாய் 125,000/- அறவிடப்படல் வேண்டும் என கட்டிட உரிமையாளர் ஆணைக்குழுவிற்கு அறிவித்தார். ஆதலினால் இவ்விடயம் தொடர்பிலான இறுதிக்கடிதமும் மற்றும் தொடர்புடைய பற்றுச்சீட்டுகளின் நிழற்பிரதிகளும் இத்துடன் இணைக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கமைவுற கீழ்வறுமாறு நாட்பதிவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்பதிவு - 19

மின்சாரம் - (வரவு) - ரூபாய் 70,627.39/-

நீர் - (வரவு) - ரூபாய் 6,194.12/-

படி (வரவு) - ரூபாய் 19,658.16/-

தொலை பேசி (வரவு) - ரூபாய் 19,764.12/-

டயலொக் தொலை பேசி (வரவு) - ரூபாய் 8,756.21/-

வைப்புப் பணம் (வரவு) - ரூபாய் 125,000.00

(இந்த வருடத்தில் செய்யப்பட்ட வேண்டிய இந்த நாட்குறிப்புகள் போன வருடத்துடன் தொடர்புடையவை)

(ஔ) கீழ் குறிப்பிட்ட தொடக்க மிகுதிகளை கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

| | |
|---|---|
| கடன்கொடுத்தோர் கணக்கின் தொடக்க மிகுதி | - ரூபாய் 82,860/- |
| சர்வதேச கண்காட்சிக்கு செலவிடப்பட்ட செலவினம் | - ரூபாய் 903,399/- |
| கல்வி அமைச்சுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை | - ரூபாய் 46,305/- |
| மீளளிக்கத்தக்க கேள்விமனுவைப்புகள் | - ரூபாய் 41,087/- |

(ஃ) ஆணைக்குழுவிற்கு சொந்தமான இருவானங்கள் மீள்மதிப்பீடு செய்து பின் அது விற்கப்பட்ட போது அதன் மூலம் பெற்றுக் கொண்ட இலாபமான ரூபாய் 2,750,000/- ஒதுக்கீட்டு கணக்கிற்கு மாற்றப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

நாட் பதிவு - 20

| | |
|---|---|
| ஏனைய வருமான கணக்கு (வரவு) | - ரூபாய் 2,750,000/- |
| மீள்மதிப்பீடு ஒதுக்கீடு | - ரூபாய் 2,750,000/- |

(மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு க/கு திருத்தப்பட்டது)

க) நாட்பதிவு - 21

| | |
|---|---|
| ஏனைய வருமான கணக்கு (வரவு) | - ரூபாய் 1,497,537/- |
| மூலதன இலாபம் | - ரூபாய் 1,497,537/- |

(வாகன விற்பனையின் மூலம் பெறப்பட்ட மூலதன இலாபம் திருத்தப்பட்டது)

(கா) மீளாய்வுட்குட்பட்ட காலப்பகுதியில் புத்தாக்குனர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற கடனுக்குரிய வட்டி வருமானமான ரூபாய் 37496/- ஆனது கணக்குகளில் பதிவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

நாட்பதிவு - 22

| | |
|---|---|
| புத்தாக்குனரின் கடன் நிதியம் (வரவு) | - ரூபாய் 37496/- |
| வட்டி வருமானம் (செலவு) | - ரூபாய் 37496/- |

(புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பில் பெறப்பட்ட வட்டி க/கு இல் பதியப்பட்டது)

2.2.3 இணைக்கப்படாத கணக்குகள்.

தொடர்புடைய திருத்தங்களை கணக்குகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.4 கணக்காய்வுக்கு சான்று போதாமை.

நிலையான சொத்துகள் - இப்போது வரைக்கும் நிலையான சொத்துக்களின் உறுதிப்படுத்துகையானது பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வங்கியில் மற்றும் கையில் காசு | - மிகுதியை உறுதிப்படுத்தி வங்கியினால் முன்வைக்கப்பட்ட கடிதத்தினை இத்துடன் முவைக்கிறேன். சில்லறை காசு புத்தகமும் அறுதியீடு செய்யப்பட்டுள்ளது. |
| முற்பணங்கள் | - முற்பணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபாய் 136,633/- ஆனது பல வருடங்களுக்கு முன்பே நிதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதலினால் இந்தத் தொகையை புத்தகங்களிலிருந்து அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகள் | - முற்பணங்கள் என்பதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதே காரணமே, நிலுவையாகவுள்ள கொடுப்பனவின் கீழ் காட்டப்பட்டுள்ள ரூபாய் 341,088/- இனை பாதிக்கும் காரணமாகும். ஆதலினால் இதனையும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க விரும்புகிறேன். |

2.2.5 பெறப்பட வேண்டிய செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

(அ) இந்த மிகுதிகள் தொடர்பில்ஆறு வருடங்களுக்கு அதிகமான காலப்பகுதியிலிருந்து எது வித பதிவுகளும் ஆணைக்குழுவிடம் இல்லாததினால் இந்த மிகுதிகளை தொடருவதா அல்லது பதிவழிப்பதா என்பதை குறித்து தீர்மானித்தல் கடினமாயிற்று. இவை தொடர்பில் ஏதேனும் அறிக்கைகள் உங்கள் நிறுவனத்தின் பணிகளுக்குரிய கோப்புகளில் உள்ளடக்கியிருப்பின் அது பற்றி எமது கவனத்திற்கு கொண்டு வரும்படி தயவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

(ஆ) புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.

மேற்கூறப்பட்டதின் கீழ் காட்டப்பட்ட கடன் தொகையானது ஒரு ஊக்குவிப்பு அடிப்படையிலேயே புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதுடன், இந்தக் கடன் தொகைகளை அறவிட முடியாது என்பது கள அவதானிப்புகளின் மூலம் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட இத் தொகையை புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு உதவித் தொகை என்ற அடிப்படையில் பதிவழிக்கும் படி, அமைச்சின் செயலாளருக்கு ஆணைக்குழுவின் சபைப்பணிப்பாளர்கள் கோரிக்ைக விடுத்துள்ளனர். கோரிக்கைக்கு அமைவுற செய்யப்படுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

2.2.6 முறைசார்பற்ற கொடுக்கல் வாங்கல்கள்

' சஹசக் நிமவும்' என்ப்படும் தேசிய புத்தாக்க கண்காட்சிக்குரிய விருதுகள் வழங்கப்படலிற்கும் மற்றும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்படும் "பரதீபா" (இளம் புத்தாக்குனர் கழகம்) நிகழ்ச்சித்திட்டத்திற்கும் அனுசரணை செய்யப்படுவதற்கு தனியார் துறையினரின் பங்களிப்பை பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த இடத்தில் பரிசுக்குரிய தொகையில் பெறுமானத்தை தீர்மானித்தல் மற்றும் ஊடகவியலாளர் என்ற விடயங்களில் மட்டுமே ஆணைக்குழு தலையிட்டது. இதற்கமைவுற இந்த தனியார் நிறுவங்கள் வெற்றி பெற்றவர்களுக்குரிய விருது பணத்தை வழங்கும் போது தமது நிறுவனத்தின் பெயரிலான காசோலைகளின் மூலம் வழங்கியது. இந்த விடம் தொடர்பிலான செயன்முறையில் ஆணைக்குழுவானது எந்த விதத்திலும் சம்மந்தப்படவில்லை ஆதலினால் இது தொடர்பிலான எது வித கொடுக்கல் வாங்கல்களும் கணக்குகளில் பதியப்படவில்லை. எனினும் பெறப்பட்ட அனுசரணைகள், நன்மைகள் மற்றும் இவ்விடயத்துடன் தொடர்புடைய முன்னேற்றங்கள் என்பன ஆண்டறிக்கையில் பதியப்பட்டுள்ளன

3.3 செலவினத்தில் அசாதாரண அதிகரிப்பு.

2010 ஆம் ஆண்டிலிருந்து எது வித அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது செயற்படாத நிலையிலிருந்த இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, 2011 ஆம் ஆண்டு ஜுன் மாதம் புதிய ஆணையாளர் மற்றும் பணிப்பாளர் சபை ஒன்றினை நியமனம் செய்த பின்னர் ஆணைக்குழுவின் சட்டத்திற்கு அமைவுற நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துகை செய்ததன் மூலம் மீண்டும் செயற்படத் தொடங்கியது. இவ்வாறாக நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்துகை செய்யப்பட்டதன் பெறுபேறு, நடப்பு மற்றும் மூலதன செலவினங்கள் அதிகரித்தமை ஆகும்

4. தொழிற்பாட்டு மீளாய்வு.

4.1. சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்.

ஒரு கருத்திட்டம் செயற்படுத்துகை செய்தல் பொருட்டு தாபிக்கப்பட்டதும் பொலநறுவை நிதியம் எனப் பெயரை கொண்டதுமாக ஒரு நிதியம் இருந்த போதிலும் அதற்கான கருத்திட்டம் அமுலாக்கம் செய்யப்பட வில்லை என்பதுடன் கடந்த வருடத்து கணக்காய்வு அறிக்கை வரை இந்நிதியமாது செயற்படாத நிதியமாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்நிதிமானது 2012 (08) -13 03 (111) எனும்இலக்கத்தை கொண்ட ஆளுமை சபையின் தீர்மானத்தின் படி உருவாக்கப்பட்டது.

4.2. வீணான மற்றும் பாவிக்கப்படாத சொத்துகள்

அகற்றப்படல் வேண்டும் எனத்தீர்மானிக்கப்பட்ட சொத்துகள் முறையாக அகற்றப்பட்டுள்ளன.

4.3. பதவியணி முகாமைத்துவம்

(அ) உதவிப்பணிப்பாளர் (நிதியம்) எனும் பதவி வெற்றிடம் நிரப்பப்பட்ட போதிலும் 05 ஆராய்ச்சி உதவியாளர்கள் பதவிகளில் 01 பதவிக்கே ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது ஏனைய ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(ஆ) சாரதி பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதுதொடர்பிலான நேர்முகப் பரீட்சைகள் 2013.06.10 ஆம் திகதியன்று நடாத்தப்படுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. ஆணைக்குழுவிற்கு சொந்தமான 04 வாகனங்களில் ஒன்று ஆணையாளருக்கென்றே அவரது அலுவலக தேவைப்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட அதே வேளையில் ஏனைய 03 வாகனங்களும் ஆணைக்குழுவின் தேவையை நிறைவேற்றுவதற்காக பொது வாகனங்களாக தொழிற்படுகின்றன. சாரதி பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்ட பின்பு இந்தப் பிரச்சனை தீர்வு செய்யப்பட்டு விடும்.

4.4. வீணான மற்றும் பாவிக்காத சொத்துகள்

ஆணைக்குழுவினால் கடன் வழங்கப்பட்ட புத்தாக்குனர்கள், தமது தவணைக் கட்டணங்களை சம்மந்தப்பட்ட வங்கிக் கணக்கிற்கு வைப்பு செய்ய ஆணைக்குழு சேர்ந்த

இந்த நிதியத்தை மீண்டும் புத்தாக்குனர்களுக்கே கடனாக வழங்கியது.(இவ்விடயங்கள் அமைச்சின் கவனத்திற்கு அறியச் செய்யப்பட்டுள்ளன)

## 5. பொறுப்பும் சிறந்த ஆளுமையும்

### 5.1. உள்ளக கட்டுப்பாடு.

இப்போது வரைக்கும் முகாமைத்துவ உதவியாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர் (நிதி) ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அத்தடன் எதிர்காலத்தில் நிறுவனத்தின் மீதான உள்ளக கட்டுப்பாடு இன்னும் சிறப்பாக இருக்கும்.

### 5.2. ஆண்டறிக்கையை முன்னிலைப்படுத்தல்

2013 மார்ச் மாதத்திற்குள் வருடாந்த அறிக்கைகளாவன அமைச்சிக்கு முன்னிலைப்படுத்தப்பட்டதுடன், ஆண்டறிக்கைகள் பாரளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தல் தொடர்பில் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வாறு பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தல் தொடர்பில் அமைச்சக்குள்ள பணிகள் முடிந்தவுடன் ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு முன்னிலைப்படுத்தப்படும்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட வழுக்களை திருத்துவதற்கு ஆணைக்குழு பெரும் பிரயத்தனங்களை எடுக்கின்றது. இந்நிலைக்கு ஆணைக்குழுவில் நிலவுகின்ற பதவி வெற்றிடங்களே காரணமாகும். அந்நேரத்தில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டில் நிலவிய குறைபாட்டின் காரணமாக புத்தாக்குனர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்தல் என்பது ஒரு கஷ்டமான காரியமாக இருந்தது. உதவித் தொகையினை வழங்குவதற்கு ஒரு முறைசார்ந்த திறமுறையினை ஏற்கனவே நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். ஆணைக்குழுவின் சபை பணிப்பாளர்கள் மற்றும் ஆளுனர் சபையினர் ஆகிய சகலரும் உள்ளடங்கலாக அனைவரும் இந்த செயன்முறைகளை சிறந்த முறைவடிவமாக்கம் செய்து சிறந்த செயன்முறைகளை விருத்தி செய்வதன் மூலம் சிறந்த ஆளுமையை பெற்றுக் கொள்வதில் தமது அவதானத்தை செலுத்துகின்றனர்.

**டி.அநுராதா எல். இளையப்பெருமா**
**பணிப்பாளர்,**
**இலங்கை புத்தக்குனர் ஆணையாளர்**